# அறிவுக் களஞ்சியம்

13




சேது கால்வாய்

4 ஆம் பக்கம் பார்க்க

வரதர் வெளியீடு

ரூபா 12

## புதினம்

✱ குருநாகல் நகர மத்தியில் ஆடம்பர மாளிகை ஒன்றிலிருந்து 17 குழந்தைகள் மீட்கப்பட்டனர். இக் குழந்தைகளின் வயது 1 தொடக்கம் 7 ஆகும், இந் நிலையம் குழந்தைகள் விற்பனை செய்யும் பண்ணையாக இருக்கலாம் என்று கூறப்புடுகிறது.

✱ பல்கலைக்கழகங்களில் இடம் பெறும் அநாகரிகமான செயலான ''ராகிங்'' ஒழிக்க சட்ட மூலம் கொண்டு வரப்பட வேண்டுமென்று பல்கலைக்கழக வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

✱ வடக்கு கிழக்கு ஆஸ்பத்திரிகளுக்கு வைத்திய நிபுணர்கள் பற்றாக் குறையை நீக்குவதற்கு ரஷ்ய டாக்டர்கள் வரவழைப்பில் அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது.

✱ வல்வெட்டித் துறையைச் சேர்ந்த மாணவி நியூசிலாந்தில் கணிதத் துறையில் பெரும் சாதனைகளை நிகழ்த்தியுள்ளாள். 7ம் வகுப்பு படிக்கும் இந்த மாணவி செல்வி ஷர்மிளா பாலநாதன்.

✱ போசாக்கு உணவு இன்மையால் யாழ் மாவட்டத்தில் 84 சிசுக்கள் மரணமாகியுள்ளன. 8 தாய்மார்கள் பிரசவத்தின் போது மரணித்திருக்கிறார்கள்.

✱ இந்த யூலை 1ம் திகதி யாழ் பொது நூலக எரிப்பு நினைவு நாளாகும்.

✱ அம்பாந்தோட்டையில் இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று பொலிசாரால் குளிர்சாதனப் பெட்டிக்குள் இருந்து மீட்கப்பட்டது.

✱ அரச வாகனம், வீட்டு வசதிகளுடன் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவிக்கு 16,000 ரூபா மாதாந்த பென்சன் கிடைக்கவுள்ளது.

✱ பிரிட்டன் தடுப்பு முகாம்களில் இலங்கைத் தமிழர்கள் பலர் சிறை வைக்கப்பட்டுள்ளனர் என்று பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகிறது.

✱ கடந்த ஆண்டு ஜேர்மனிக்குச் சென்று தஞ்சம் கோரிய 5300 இலங்கையர் தற்போது நிறைவேற்றப்பட்ட புதிய சட்டமூலம் நாடு கடத்தப்படுவார்களாம்.

✱ சாயிபாபாவை கொல்ல முயற்சித்தவர்கள் சாயிபாபாவா கல்விக் கழக மாணவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த நான்கு பேரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். இதில் ஏதோ மர்மம் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

— மணிசேகரன்.

அறிவுக்

# களஞ்சியம்

**13**

ஆசிரியர்: வரதர்

O

இணை ஆசிரியர்:

க. குணராசா M., A, S L.A.S

(செங்கை ஆழியான்)

O

துணை ஆசிரியர்:

"புத்தொளி"

O

அலுவலகம்,

226, காங்கேசன்துறைச்

சாலை, யாழ்ப்பாணம்.



காப்பாளர்கள்:

★ திருமதி. ச. அருள்நங்கை B. A. (Hons)
★ திரு.கா. வை. இரத்தினசிங்கம் (கொக்கூர்கிழார்)
★ திரு. சு. குமாரசாமி, B. Sc.,
★ மூதறிஞர் க. சி. குலரத்தினம்
★ பேராசிரியர், அ. சண்முகதாஸ்
★ திரு. நா. கா. சண்முகநாதபிள்ளை B. Sc.,
★ பேராசிரியர், செ. சிவஞானசுந்தரம் (நந்தி)
★ திரு. சி. சிவசரவணபவன் M. A., (சிற்பி)
★ வித்துவான் க. சொக்கலிங்கம் M. A. (சொக்கன்)
★ திரு. அநு. வை. நாகராஜன்
★ திரு அ. பஞ்சலிங்கம் B. Sc.,
★ திரு. ச. பாலசுந்தரம் B. A. (Hons)
★ வண. பிரான்சிஸ் அடிகளார். M. A.,
★ மருத்துவ கலாநிதி, எம். கே. முருகானந்தன்.
★ திரு. கோ. சி. வேலாயுதம் B. Sc.,


மாபெரும்

# சிறப்புப் பொது அறிவுப் போட்டி

## பரிசு ரூபா 3000/-

இந்த இதழின்

6, 7, 8 ஆம் பக்கங்கள் பார்க்க.

# திருக்குறள் முத்துக்கள்



**ஒழுக்காறாக் கொள்க ஒருவன் தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.**

தன் நெஞ்சத்து - தனது மனத்திலே; அழுக்காறு - பொறாமை; இலாத இயல்பு - இல்லாத இயல்பை; ஒருவன் - எந்த ஒரு மனிதனும்; ஒழுக்காறா - ஒழுங்கான வாழ்க்கை நெறியாக; கொள்க - கொண்டு வாழ வேண்டும்.

தனது மனத்திலே பொறாமை என்ற தீக்குணம் இல்லாமல் வாழ்வதை மனிதன் ஒழுக்க நெறியாகக் கொள்ள வேண்டும்.

தமிழிசைக்கு ஒரு நா. மு. வி. நவரத்தினம்

# இசையும் பொருளும்

நல்ல கவிஞர்கள் செய்த பாடல்களை, இசைக் கலைஞர்கள் பாடுகிறார்கள். அறிவிப்பாளர், பாடுகிறவரின் பெயரையும், பாடலின் இராக தாளங்களையும், சில சமயங்களில் இசை அமைத்தவரின் பெயரையும் அறிவிக்கிறார்.

ஆனால் பாடலை இயற்றிய கவிஞரின் பெயர் அங்கே செத்து விடுகிறது!

பாடகர் பாடுகிறார். பாடலுக்குரிய இசையிலேயே அவருடைய முழுக்கவனமும் இருக்கிறது. பாடலின் சொல்லிலோ பொருளிலோ அவருக்கு அக்கறையில்லை. சில சமயங்களில் பாட்டின் சொல்லையும் பொருளையும் அவர் சித்திரவதையும் செய்கிறார்!

இந்த வழக்கத்துக்கு மாறாக, பாடலின் சொற்களைத் தெளிவாக உச்சரித்து, சொற்களின் பொருளை உணர்ந்து, தாம் உணர்ந்தது மட்டுமன்றி பாடலைக் கேட்போரையும் உணரச் செய்து பாடுகின்ற சில சங்கீத பூஷணங்கள் நமது யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள். அவர்களில் முக்கியமாகக் குறிப்பிடக் கூடியவர் சங்கீத பூஷணம் நா. வி. மு. நவரத்தினம் அவர்கள். அவர் தேவார திருவாசகங்ளை - ஏன் எந்தத் தமிழ்ப் பாடலையும் பாடினால் இன்பத்தேன் வந்து காதிலே புகுந்து, நெஞ்செல்லாம் இனிக்கிறது!

கேட்போர் பாடலின் பொருளை உணர்ந்தால் அதன் சுவை மிக அதிகமாகிறது.

— வ.

# குடம்பை - கூடா? முட்டையா?

"சொக்கன்"

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொடுயிரிடை நட்பு.

''குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்று - முன் தனியாத தனித்து இருக்காத முட்டை தனித்துக் கிடப்ப, அதனுள் இருந்த புள் (பறவை) பருவம் வந்துழிப் பறந்து போன தன்மைத்து, உடம்போடு உயிரிடை நட்பு - உடம்பிற்கும் உயிருக்கும் உளதாய நட்பு.

''...............இனி 'குடம்பை' என்பதற்குக் கூடு என்று உரைப்பாரும் உளர். அது புள்ளுடன் தோன்றாமையானும் அதன் கண் (கூட்டினுள்) அது மீண்டும் புகுதல் உடைமையானும், உடம்புக்கு உவமையாகாமை அறிக.'' பரிமேலழகர்.

'முட்டையினுள்ளே கிடந்த பறவை முட்டை பிளந்ததும் அதனுள்ளிருந்து வெளிப்பட்டுப் பறந்து போவது போன்றதே உடலுக்கும் உயிருக்குமிடையேயுள்ள தொடர்பாகும்' என்ற பரிமேலழகரின் உரையினை இக்கால உரை நடையிலே விளக்கலாம். ஆனால் இந்தக் கருத்துப் பொருந்தாது என்பதனை அறிஞர் பலரின் கூற்றுக்களையும், குடம்பை என்ற சொற் பொருளாட்சியையும் அடிப்படையாகக் கொண்டு, மு. வை அரவிந்தன் எம். ஒ. எல் தமது 'உரையாசிரியர்கள்' என்ற நூலிலே (பக்கம் 469 - 70; வெளியீடு - மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்) நிறுவியுள்ளார். அது பின்வருமாறு:-

''முட்டையை விட்டு வெளிப்படும் உயிரை அப்பருவத்தில் பார்ப்பு என்று சொல்லுதல் வழக்கேயன்றிப் புள் என்று சொல்லுதல் வழக்கன்று. மேலும், முட்டையை விட்டு வெளிப்பட்டவுடன் பறக்கும் பார்ப்பை நாம் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை''

— வ. உ. சிதம்பரப்பிள்ளை

''முட்டை உருச்சிதையாமல் பார்ப்பு அதனின் நீங்குமாறில்லை; யாக்கை உருச்சிதையாமல் உயிர் நீங்குமாறுண்டு. அது நீங்கிய பின்னர் யாக்கை சிதைவதே ஒரு தலை''

— ச. தண்டபாணிதேசிகர்

''கருவும் ஓடும் ஒன்றாய்த் தோன்றாது. கரு முதிர்ந்த பின்னரே மேலேயுள்ள பச்சை இறுகி ஓடாகின்றது. ஆதலானும் அவ்வுரை பொருந்தாது''

— இரத்தினவேல் முதலியார்

''குடம்பை என்ற சொல் சங்கநூல்களில் 'கூடு' என்ற பொருளில் வருகின்றதேயன்றி முட்டை என்ற பொருளில் வரவில்லை. பரிமேல

ழகருக்குப் பின் தோன்றிய பிங்கலந்தை என்ற நிகண்டு மட்டுமே குடம்பை என்பதற்கு முட்டை என்று பொருள் கூறுகின்றது''

— மு. வை. அரவிந்தன்

''பரிமேலழகர் ஒழிந்த மற்ற உரையாசிரியர் அனைவரும் குடம்பை என்ற சொல்லுக்குக் கூடு என்றே பொருள் எழுதி உவமையை விளக்கு கின்றனர்'' என்று தமது முடிவினை மேலும் அரண்செய்யும் அரவிந்தன். உடம்பைக் கூடு என்றே கூறுவதாகிய மரபிற்குச் சிலப்பதிகாரம் ('கூடலான் கூடாயினான்'), முத்தொள்ளாயிரம் ('அன்னை வெறுங்கூடு காவல் கொண்டாள்'), நந்திக்கலம்பகம் ('ஓடாததேரிலொரு கூடுவருவதென்று கூறுங்கள்,), நல்வழி ('கூடு விட்டிங்கு ஆவிதான் போயின் பின்பு'). ஆகிய நூல்களிலிருந்தும், உலக வழக்கிலிருந்தும் (கூடு விட்டுக் கூடு பாய்தல்) சான்றுகள் காட்டியுள்ளார். இவரின் முடிபு ஏற்புடையதே எனினும் குடம்பை - கூடு, என்பதற்கான சான்றுகளைக் காட்டாமையும், ''சங்கநூல்களில் கூடு என்ற பொருளே வருவதன்றி......'' என்றவர் பிற்கால நூல்களிலிருந்து உடம்பிற்குக் கூடு என்ற உவமையை எடுத்துக் காட்டுகளாக்த் தந்துள்ளமையும் ஆய்விற்குரியன. ○

மேலட்டைப் படக் கட்டுரை

பனாமா,
சூயெஸ் கால்வாய்கள்
போன்று
ஒரு சிறு அளவில்
குறுகும் கடல் வழி —

# சேது கால்வாய்

~~ க. கு.

உலகின் கப்பற் போக்குவரத்திற்கான கடல் வழிகளைக் குறுக்கிய புகழ் பெற்ற கால்வாய்களின் வரிசையில் சேதுகால்வாய் ஒன்றாக அமையவுள்ளது. அத்திலாந்திக்கில் பயணம் செய்த கப்பல்கள் பசுபிக் சமுத்திரத்தில் பிரவேசிப்பதாயின் தென்னமெரிக்காவைச் சுற்றிப் பயணம் செய்தன; பனாமாக்கால்வாய் அத்திலாந்திக்கையும் பசுபிக்கையும் குறுகிய வழியாக இணைத்தது. அதேபோல செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைத்து சுயெஸ் கால்வாய் வெட்டப்பட்டதும் ஆபிரிக்காவைச் சுற்றி நிகழ்ந்த கடல் பயணம் குறுகிப் போனது பனாமா, சுயெஸ் போன்றில்லாவிடினும் சிறு அளவில், அராபிக் கடலிலிருந்து வங்காள விரிகுடாவை அடைவதற்கு இலங்கையை வலம் வரும் கடற்பயணத்தை அமைக்கப்பட

விருக்கும் சேது கால்வாய் குறுக்கப் போகிறது.

இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கின்ற பாக்குத் தொடு கடல் ஆழம் குறைந்தது; அத்துடன் தலை மன்னாரிலிருந்து ராமேஸ்வரம் வரை இராமர் அணை எனப்படும் கற்பார் மன்னார் வளைகுடாவையும் பாக்குத் தொடுகடலையும் பிரிக்கின்றது. இந்த இராமர் அணையின் குறுக்காக அமைய விருப்பதே சேது கால்வாய் ஆகும்.

இந்தியாவின் மேற்குக்கரையோரத் துறைமுகங்களிலிருந்து புறப்படும் கப்பல்கள், இந்தியாவின் கிழக்குக் கரைத்துறைமுகங்களைச் சென்றடைய வேண்டுமாயின் இலங்கையைச் சுற்றி வலம் வர வேண்டியுள்ளது. இராமர் அணையினூடாகச் செல்ல முடிந்தால் பயணம் இலகுவாயும் செலவு குறைவாயும் அமையுமென 1860 ஆம் ஆண்டு பிரித்தானிய சப்பற் படைத்தளபதி ரெயிலர் திட்டம் வகுத்தார். ஆனால், இது பற்றி ஆராய்வதற்கு 1945 இல் தான் ஒரு குழு நியமிக்சப் பட்டது. ஆராய்ந்து வெளிவந்த அறிக்கை நடைமுறைப் படுத்தப்படவில்லை. 1955 இல் டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் மீண்டும் சேதுகால்வாய்த்திட்டத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துரைத்தார். அதனால் 1963 இல் இந்தியாவின் நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தில் இது சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1965 இல் வி. சி. வெங்கடேஸ்வரன் தலைமையில் மீளாய்வு செய்யப்பட்டு, அதனை நிறைவேற்ற 37 கோடி ரூபா செலவாகுமென மதிப்பிடப் பட்டது. அதனால் இந்திய மத்திய அரசு கவனம் செலுத்தவில்லை. மீண்டும் 1981 இல் இலட்சுமி நாராயணன் என்பவர் தலைமையில் சேதுகால்வாய்த்திட்டம் ஆராயப்பட்டு 300 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்த இந்திய மத்திய அரசு இன்று முயல்கின்றது.

அராபிக் கடலையும் வங்காள விரிகுடாவையும் இணைத்து சேதுகால்வாய் வெட்டப்பட்டால், தூத்துக் குடிக்கும் சென்னைக்குமிடையிலான கடற்பயணம் 434 மைல்களால் குறையும்; விசாகபட்டினம் கல்கத்தா ஆகிய துறைமுகங்களுக்கான பம்பாய் கடல் வழி குறையும். இலங்கையின் கொழும்புத் துறைமுகம் தனது முக்கியத்துவத்தினைச் சற்று இழக்கும். ஆனால், வடபகுதித் துறை முகமான காங்கேசன்துறை சேதுகால்வாயில் அமைவதால், முக்கியத்துவம் பெறும் என்பதில் ஐயமில்லை○

## ஒரு அருமையான கவிதை!

'பாரி பாரி' என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனுமல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே.

— கபிலர் (புறம் - 107)

இந்தப் புலவர்களெல்லாம் பாரி ஒருவனையே புகழ்ந்து பேசுகிறார்களே, இது என்னை! பாரி ஒருவன்தானா? உலகை வாழ்விக்க மாரியும் உண்டல்லவோ? (வெளிப்பார்வைக்குப் பாரியை இகழ்வது போலப் பேசி, அவனை மாரியுடன் ஒப்பிட்டு உயர்த்தும் புலவரின் திறம் நயக்கத்தக்கது!)

"அறிவுக் களஞ்சியம்" அளிக்கும்

# சிறப்புப் பொது அறிவுப் போட்டி

## பரிசு ரூபா 3000/-

1. இப் போட்டிக்கு 30 வினாக்கள் தரப்பட்டுள்ளன. இவ் வினாக்கள் பெரும்பாலும் அறிவுக் களஞ்சியம் 1 — 12 வரையுள்ள இதழ்களிலிருந்தே பெறப்பட்டுள்ளன.
2. விடைகளைத் தனித்தாளில் எழுதி, 30 ஆம் பக்கத்திலுள்ள போட்டி நறுக்கை நிரப்பி, வெட்டி எடுத்து விடைத்தாளுடன் இணைத்து, அத்துடன் ஒரு ரூபா பெறுமதியான பழுதுறாத முத்திரையையும் வைத்து அனுப்ப வேண்டும்.
3. அனுப்ப வேண்டிய முகவரி: சிறப்புப் பொது அறிவுப் போட்டி அறிவுக் களஞ்சியம், 226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம். வசதியுள்ளவர்கள் நேரிலும் கொடுக்கலாம்.
4. அஞ்சல் மூலம் அனுப்பினாலும், நேரில் கொடுத்தாலும் 12. 8. 93 பி. ப. 5 மணிக்கு முன் மேற்படி முகவரியில் கிடைக்க வேண்டும். பிந்திக் கிடைக்கும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா.
5. ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையுடனும் ஒரு போட்டி நறுக்கும், ஒரு ரூபா முத்திரையும் இணைத்திருக்க வேண்டும் (2 விடைகளை அனுப்பும் ஒருவர் தனித், தனி ஒரு ரூபா முத்திரை வைக்க வேண்டுமென்பதில்லை. இரண்டும் சேர்த்து இரண்டு ரூபா முத்திரையையும் வைக்கலாம்)
6. முற்றிலும் சரியான விடை எழுதியவர்களிடையே அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு ரூபா 100/- வீதம் ஐந்து பேருக்கு பரிசு வழங்கப்படும். அத்துடன்,

சரியான விடை அனுப்பியவர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட நாளில் யாழ் நகரிலுள்ள ஒரு மண்டபத்துக்கு அழைக்கப்பட்டு. அங்கு சமுகமளித்தவர்களிடையே வாய் மொழி மூலமான ஒரு தேர்வு நடத்தப்படும். அதில் அதிக மதிப்பெண்கள் பெறும்,

முதலாமவருக்கு பரிசு ரூபா 1000/-
இரண்டாமவருக்கு பரிசு ரூபா 500/-
மூன்றாமவருக்கு பரிசு ரூபா 300/-
நாலாவது தொடக்கம் பத்தாவது வரை வரும்
ஏழு பேருக்கு ஆளுக்கு ரூபா 100/ வீதம்
ரூபா 700/- பரிசுகளாக வழங்கப்படும்.

இவற்றுடன் முதலில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட ஐவருக்கு ரூபா 500/- சேர்த்து மொத்தப் பரிசு ரூ. 3000/- ஆகும்.
இப்போட்டி சம்பந்தமாக எழும் ஐயங்களில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.

- ஆசிரியர்

பரிசு வழங்குவோர்:
இப்போட்டிக்கான பரிசில்களை வழங்குவதற்குச் சில அன்பர்கள் மனமுவந்து முன்வந்துள்ளார்கள். அது பற்றிய விபரம் அடுத்த இதழில்!

## வினாக்கள்

1. பூமியே ஞாயிற்றுத் தொகுதியின் மையம் என்ற கிரேக்க அறிஞர் யார்? சூரியனே ஞாயிற்றுத் தொகுதியின் மையம் என்ற போலிஸ் அறிஞர் யார்?

2. கலிபோர்ணியாவில் இன்யோ என்ற விடத்தில் இருக்கும் ஆழமான இறக்கத்தினை எப்படி அழைப்பர்?

3. இலங்கையில் சோயா அவரை ஆராய்ச்சி நிலையம் எங்குள்ளது?

4. ஓசோன் படையில் துவாரம் ஏற்படக் காரணமான வாயு எது?

5. சசகசாச் செடியின் இளங்காயைக் கீறி அதிலிருந்து வடியும் பாலைக் காற்றில் உலர்த்திப் பெறப்படும் லாகிரிப் பொருள் யாது?

6. குட்டி போடுகின்ற மரத்தைத் தெரியுமா? இம்மரத்தின் கனிகள் உதிராமல் இருக்கும். அந்நிலையில் விதைகள் முளைத்து விடும். அவை தாய் மரத்திலிருந்து சத்துக்களைப் பெற்றுக் குட்டிக் கன்றுகளாக வளரும். பின்னர் தக்க பருவத்தில் இக்குட்டிகள் உதிர்ந்து உகந்த இடத்தில் தங்கி வேர்களைப் பதித்து வளர்கின்றன. இவ்வாறு குட்டி ஈன்று வம்சத்தை நிலைநாட்டும் மரம் யாது?

7. உலகிலேயே மிகப் பெரிய விலங்கு எது?

8. ஏறத்தாழ 27 மீற்றர்கள் நீளமான ஒரு பறவை அலகுகளில் பற்களைக் கொண்டிருந்தது. பூமியில் வாழ்ந்து அழிந்து போன பறவை இது. இதன் பெயர் யாது?

9. O ஓவியர், சிற்பி, கட்டிட விற்பன்னர், பொறியியலாளர், பாடகர் எனப்பல்வேறு இயல்களிலும் புகழ்பெற்று வாழ்ந்த இத்தாலிய அறிஞர் யார்?

10. O ஹோமர் என்ற மகாகவியால் எழுதப்பட்ட கிரேக்க காவியங்கள் எவை?

11. கிரிக்கெட் ஆட்டத்திறமைக்காகப் பிரித்தானியச் சேர் பட்டம் வழங்கிக் கௌரவித்தவர் யார்?

12. சதுரங்க விளையாட்டிற்கு வழங்கி வரும் 'Chess' என்ற சொல் எவ்வாறு உருவாக்கப்பட்டது?

13. O 'நான் அடிமையாயிருக்க விரும்பவில்லை. எனவே மற்றவர்களை அடிமையாக வைத்திருப்பதையும் விரும்பவில்லை' இவ்வாறு கூறியவர் யார்?

14. O 'அழகசுந்தர தேசிகர்' என்ற பெயரால் அழைக்கப்பட்ட தமிழறிஞரின் பெயர் யாது?

15. O 'யாழ்நூல்' என்ற நூலின் ஆசிரியர் யாவர்?

16. O குளத்தூர் முன்சீப் வேதநாயகம் பிள்ளை எதனாற் போற்றப்படுகின்றார்?

17. O திசையைச் சரிவரக் காட்டுகின்ற உலகப்படத்தினை வரைந்தவர் யார்?

18. O விண்வெளியில் நடந்த முதலாவது அமெரிக்க விண்வெளி வீரர் யார்? அவர் சென்ற விண்கலம் யாது?

19. O 1783 இல் மொன்ற்கோல்பர் என்ற பலூனில் முதன் முதல் பூமியிலிருந்து விண்ணிற்குப் பயணம் செய்தவை ஒரு செம்மறி ஆடு, ஒரு சேவல், ஒரு வாத்து என்பனவாகும். அதே போல விண்கலமொன்றில் ருஷ்யா அனுப்பிய விலங்கு யாது? அதன் பெயர் என்ன?

20. O சந்திரன்கள் இல்லாத கோள்கள் எவை? புதன் என்ற கோளிலும் பார்க்கப் பருமன் கூடிய சந்திரன் (துணைக் கோள்) யாது?

21. மனிதனின் சிறிய அடியைக் கொண்டு, மனுக்குலத்திற்கு ஒரு மாபெரும் பாய்ச்சலைச் செய்த விண்வெளி வீரன் யார்?

22. ஈழப் போராட்டத்தில் முதன் முதல் மரணத்தைத் தழுவிக் கொண்ட வேங்கை யார்? எந்த ஊரைச் சேர்ந்தவர்?

23. ஆப்கானிஸ்தானில் குளிர் காலத்தில் ஆடப்படும் விளையாட்டின் பெயர் யாது?

24. கண்ணீர்ப் புகைக்குண்டுகளைத் தயாரிக்கப் பயன்படும் வாயு யாது?

25. 'அடியார்க்கு நல்லார்' என்ற ஆராய்ச்சி நூலை 1941 இல் எழுதி இந்தியாவில் வெளியிட்ட ஈழத்து அறிஞர் யார்? O



# முயல் வளர்ப்போம்

"கால் நடையான்" ○

முயலிறைச்சி உணவிற்காகப் பாவிப்பதற்கு மிகவும் சிறந்தது. முயலிறைச்சியில் ஏனைய ஆடு. மாடு, பன்றி இறைச்சிகளிலும் பார்க்கப் புரதமும் (20.5) கனிப் பொருளும் (1.5) கூடுதலாகவுள் ளன. கொழுப்பு (4) குறைவாகவுள் ளது. அதனால் மனித உணவிற்கு முயலிறைச்சி மிகவுசந்த தாகிறது. அத்துடன் முயல் வளர்ப்பு மிக இலாபகரமானது.

முயல்கள் வெகுவிரைவில் இனம் பெருக்கக் கூடியவை. ஒரு பெண் முயல் ஒரு வருடத்தில் கிட் டத்தட்ட 32 குட்டிகளை ஈனும். இவ்வாறு தொடர்ந்து 2-3 வருடங் களுக்கு ஒரு பெண் முயல் தொ டர்ந்து குட்டிகளை ஈனும். முயலின் பிரதான உணவான புல், இலை குழை உணவு, அவரையினத் தாவ ரங்கள் மற்றும் கிழங்கு வகைகளை எங்கும் இலகுவில் பெற்றுக் கொள் ளலாம். முயலிற்குக் கூடமைப்ப தற்கு அதிக செலவாகாது. முயலின் கழிவுகள் உரமாகப் பாவிக்கலாம், முயலின் தோலிலிருந்து உடை, தொப்பி ஆகியன உற்பத்தி செய்ய லாம்.

யாழ்ப்பாணத்தில் நடுத்தர அளவான, வெள்ளை நிறமான, கட்டையான உரோமத்தையுடைய முயல்களே வளர்ப்பதற்கு உகந்த வை. நியூசிலாந்தைச் சேர்ந்த வெள் ளை முயலினமும் சலிபோர்ணிய இனமும் மிகவும் சிறந்தவை.

முயல்களில் இனப்பெருக்கத்தை ஆரம்பிக்கும் போது ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத நல்லி னப் பரம்பரைகளில் இருந்து ஆண் பெண் முயல்களைத் தெரிவு செய்ய வேண்டும். பெரிய பிளே மின் இன ஆண்முயலும், நியூசி லாந்து வெள்ளையினப் பெண்ணும் இனக்கலப்பிற்கு ஏற்றன.

முயற்கூடுகளை விசாலமான மரங்களின் கீழமைத்தல் வேண்டும். பனைமட்டை, கமுகம்சிலாகை, பனஞ்சிலாகை, கிடுகு, வைக்கல் ஆகியவற்றைக் கூடுகள் அமைக்கப் பயன் படுத்தலாம். ஒரு குட்டிக்கு 2 சதுர அடி வீதம் கூடு அமைதல்

## பிரசித்தி பெற்ற வளர்ப்பு முயல் இனங்கள்

- இமாலய இனம்
- பெரிய பிளேமின் இனம்
- பெவறன்
- சன் சில
- டச்பிரஞ்சுலொப்
- றெக்ஸ்

வேண்டும். நிலமட்டத்திலிருந்து 1 அடி உயரமாகக் கூட்டின் தளம் அமைதல் வேண்டும்.

ஆண் முயல்களை எப்பொழுதும் தனித்தனியாகவே வளர்த்தல் வேண்டும். பெண் முயல்களுடன் குட்டிகளைச் சேர்த்து வளர்க்கலாம். முயல்களின் சினைக் காலம் 30 நாட்களாகும்.

முயல்வளர்ப்பு இலகுவானதும் இலாபகரமானதுமாகும். ஒரு வருடத்தில் ஒரு முயலிலிருந்து சராசரி 30 குட்டிகளை பெறலாம். இக்குட்டிகளிலிருந்து சராசரி 120 இறாத்தல் இறைச்சி பெற்றுக் கொள்ளலாம். ஒரு இறாத்தல் 50 ரூபாவாயின் ஒரு வருடத்தில் ஒரு முயலிலிருந்து 6000 ரூபா பெற்றுக் கொள்ளமுடியும்.

நமது உணவில் மாடு, ஆடு, கோழி இறைச்சிகளோடு, முயல் இறைச்சியையும் உணவு ஒதுக்கமின்றிச் சேர்த்துக் கொள்வது அவசியமாகும். O

---

## நரம்புகளில் இரத்தமா!

O அ. க. — 12 ஆவது இதழ். — திரு. க. குணராசா அவர்களின் ''மாமதம் என்ற கம்புளி யானை'' என்ற கட்டுரையில், ''அந்த மாமதத்தின் நரம்புகளிலிருந்த இரத்தம் கூடப் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டது......'' என்று வருகிறது.

நரம்புகளில் இரத்தம் இருப்பதில்லை. Artery என்னும் நாடி அல்லது Vein எனப்படும் நாளத்தில்தான் இரத்தம் இருக்கும். இவற்றை இரத்தக் குழாய்கள் என்று குறிப்பிட வேண்டும். நரம்புகளிலும் இரத்தம் இருப்பதாகப் பொதுவாகப் பலரும் நினைக்கிறார்கள்; அது தவறு.

— டொக்ரர் தி. பரமசிவம்
நல்லூர்.

---

## திருக்குறளின் மறு பெயர்கள்

உத்தர வேதம், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தெய்வநூல், பொதுமறை, முப்பால், தமிழ்மறை - இவையெல்லாம் திருக்குறளின் மறுபெயர்களே. நூலை எழுதிய வள்ளுவர் இந்நூலுக்கு முப்பால் என்ற பெயரையே வைத்திருக்க வேண்டுமென்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

---

அ. க 12 ஆவது இதழில், ''தட்டச்சுத் தந்தை கிறிஸ்தோபர் லதாம் ஷோல்ஸ்'' என்ற கட்டுரையில் அதை எழுதியவரின் பெயர் தவறுதலாக விடுபட்டுப் போனமைக்காக வருந்துகிறோம். அக்கட்டுரையை எழுதியவர்!

திரு. க. வ. சிவச்சந்திரதேவன்.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை மறுக்கிறார்!

# திருவள்ளுவர் ஆண்டு 2021 – சரிதானா?

**பா. சிவயோகநாயகி**

இருபதாம் நூற்றாண்டு தமிழ் மொழி தமிழ் இலக்கிய இலக்கண ஆய்வாளர்களில் மறைந்த பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை பெருமதிப்புக்குரிய ஆய்வாளர்களில் ஒருவர் ஆவர்.

தமிழ் அறிஞர் பலர் தமிழ்ப் பற்றினாலும், தமிழ் மொழியினை ஏனைய மொழிகளிலும் தொன்மை மிக்கது என்று நிருபிப்பதற்காகவும், வடமொழிபால் கொண்ட காரணமற்ற வெறுப்பினாலும் தமிழ் இலக்கிய வரலாற்றில் நூல்களின் கால எல்லையை மிக முற்காலத்திற்கு இட்டுச் சென்றனர். இத்தகையவர்களாக திரு. இராகவையங்கார், கா. சுப்பிரமணிய பிள்ளை போன்றோரைக் குறிப்பிடலாம்.

இவர்களிலிருந்தும் வேறுபட்டு நடுநிலை கொண்டு காழ்ப் புணர்ச்சியற்ற முறையில் நவீன தமிழ் இலக்கிய ஆய்வுக்கு வித்திட்டு வரும் அத்துறையில் மிக அரிய நூல்களை வெளியிட்டவருமாகிய பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை ''தமிழ்ச் சுடர் மணிகள்'' என்னும் நூலில் ''திருவள்ளுவர்'' (பக் 59) என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இதில் திருக்குறளின் காலம் பற்றி (பக்கம் 77) பல அரிய கருத்துக்களை கூறியுள்ளார்.

திருக்குறள் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று எனறும் (பக் 80) கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றிய காலம் கி. பி. 650 வரையிலான காலமென்றும்; வள்ளுவர் கி. பி 600 இல் வாழ்ந்தவர் என்றும் (பக் 84) பேராசிரியர் நிறுவுகின்றார்.

நாலடியார் என்னும் கீழ்க்கணக்கு நூலிலே திருக்குறள் கருத்துக்கள் பல இடம் பெற்றுள்ளன. ஆகவே திருக்குறள் நாலடியாருக்கு முற்பட்டது என்றும், நாலடியார் காலம் கி. பி. 650 எனவும் பேராசிரியர் நிறுவுகிறார்.

பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையின் ஆய்வு முறைகளுக்கும் முடிவுகளுக்கும் அவர் வாழ்ந்த காலத்திலேயே பல எதிர்ப்புக்களும் கண்டனங்களும் தோன்றின. அவர் காலத்தில் தமிழ் உலகம் அவரை நன்கு மதித்துப் போற்றவில்லை. அவரது கால ஆராய்ச்சி பற்றி குறிப்பாகத் தொல்காப்பியம் பற்றிய ஆய்வில் பல வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றதுமுண்டு.

எனினும் இலங்கைப் பல்கலைக் கழகம் பேராசிரியரை நன்கு மதித்துப் போற்றியது. அவரது கருத்துக்களில் பலவற்றை தன்னகத்தே கொண்டு விளங்கியது; விளங்குகின்றது.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் ஆராய்ச்சி முடிவின்படி திருவள்ளுவரின் காலம் கி. பி. 600 என்று தெளிவாக வரையறுக்கப் பட்டுள்ளது. கற்றோர் பலரும் இதனை ஏற்றுக் கொண்டு விட்டனர். இந்நிலையில் நாம் இன்று வழங்கி வரும் திருவள்ளுவர் ஆண்டு 2021 என்பது கருத்தற்றதாகி விடுகிறது. சுமார் 400 ஆண்டுகளை திருவள்ளுவர் ஆண்டிலிருந்து கழித்துக் கணக்கிட வேண்டியுள்ளது! ○

# வெள்ளையரின் மனிதவேட்டையும் கறுப்பர்கள் இழந்த கண்டங்களும்

'சர்வ சித்தன்'

உலகின் பல பகுதிகளில் சுதந்திரமாக வாழ்ந்து வந்த புராதன மனித இனங்கள் அழிக்கப்பட்டு வந்துள்ளன. மேலைத்தேய ஆதிக்கத்திற்கு இந்த இனங்கள் தம்மைப் பலியாக்கிக் கொண்டுள்ளன. தென்னமெரிக்காவின் தென் அந்தத்தில் ரெறாடெல்பியூகோ என்றொரு தீவு உள்ளது. அங்கு யக்கான்ஸ் (yahgans) என்ற புரதான மனித இனம் வாழ்ந்து வந்தது. 1823 ஆம் ஆண்டு சார்ள்ஸ் டார்வின் இத்தீவுக்கு வருகை தந்த போது அத்தீவில் 3000 யாக்கான் மக்கள் வாழ்ந்திருந்தனர். அவர்கள் மிகவும் பிற்போக்கானவர்களாகவும், மனித நாகரீகத்தின் ஆரம்ப கட்டத்திலும் வாழ்ந்து வந்தார்கள். வேட்டையாடியும், காய் கனி தேடியும் தமது உணவைப் பெற்றுக் கொண்ட அவர்கள், கடும்பனியிலும், மழையிலும் நிர்வாணமாக உறங்கி எழுந்தார்கள். இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்த இம் மக்களை கொடூரமான காலநிலை எதுவும் செய்ய வில்லை. அவர்களது உடல் வலிமையோடும் இயை பாக்கம் பெற்றிருந்தது. எதுவிதமான நோய்களும் அவர்களைத் தாக்கவில்லை ஆனால், ஐரோப்பியர் ரெறாடெல்பியூகோ தீவிற்கு வரத் தொடங்கியதும், தம்முடன் நோய்களையும் கூடவே காவி வந்தனர். யாக்கான்களுக்கு ஆடைகளையும் கொண்டு வந்தனர்.

யாக்கான் மக்களை நெருப்புக் காய்ச்சல், சின்னமுத்து, பூளு முதலான நோய்கள் பிடித்தன. படிப் படியாக அவர்களைக் காவு கொண்டன. 1832 இல் 3000 ஆக இருந்த யக்கான்கள் 1933 இல் 40 ஆகக்குறைவுற்றனர். இன்று ரெறா டெல்பியூ கோவில் ஒரு யக்கான் மக்களுமில்லை. ஒருகாலத்தில் அத்தீவில் இயற்கையின் குழந்தைகளாக வாழ்ந்த புராதன மக்கட் கூட்டம் ஒன்று, வேரற அழிந்து போனது. அவர்கள் இருந்தார்கள் என்பதற்கு ஆதாரமாக இன்று ஓவியங்கள், புகைப்படங்கள், அவர்கள் பயன்படுத்திய கருவிகள் என்பனவே மிஞ்சியுள்ளன.

அவுஸ்திரேலியாவிற்குத் தெற்கே தஸ்மேனியா என்றொரு தீவுள்ளது. அங்கு வாழ்ந்த தஸ்மேனியர்களின் கதை மிகப் பயங்கரமானது; பரிதாபமானது. கப்ரின் குக், என்ற கடலோடி தஸ்மேனியாவிற்கு வந்த போது அத்தீவில் வாழ்ந்த இந்த ஆதிக்குடிகள்

சாதுக்களாகவும் மகிழ்ச்சி நிறைந்தவர்களாகவும் இருந்தனர். அவர்கள் கரிய உடல் வாகும், ஆடையெதுவும் அணியாத கற்கால மனிதர்களாக விளங்கினர். வேட்டையாடி வாழ்ந்து வந்தனர். அந்தத்தீவில் அவர்களைத் தவிர வேறு எவரும் இல்லை. கங்காரு போன்ற விலங்குகள ஏராளம் கிடைத்தன.

1798 ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து நாடு கடத்தப்பட்ட குற்றவாளிகள் தஸ்மேனியாவில் ஒரு குடியேற்றத்தை நிறுவினர். அவர்கள் தம்மோடு மாடுகளையும் செம்மறியையும் இங்கு கொண்டு வந்து மேய விட்டனர். அவற்றைக் கண்ட தஸ்மேனியர்கள், கங்காருவுக்குப் பதிலாக மாடுகளையும் செம்மறிகளையும் வேட்டையாடத் தொடங்கினர். அதனால் கோபமுற்ற ஆங்கிலேயக் குற்றவாளிகள், தஸ்மேனியர்களை வேட்டையாடத் தொடங்கினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை தஸ்மேனியர்கள் கண்ட கண்ட காடுகளில் சுடப்பட்டனர். மிருகங்களாகக் கருதப்பட்டுக் கொல்லப்பட்டனர். 1835 ஆம் ஆண்டு தஸ்மேனியாவில் ஆக 200 தஸ்மேனியர்களே எஞ்சியிருந்தனர். இவர்கள் மீது பச்சாதாபம் கொண்ட ஜோர்ஜ் றொபின்சன் என்ற மிசனரிக்காரர் அவர்களை பிளின்டேர்ஸ் தீவுகளுக்குப் பாதுகாப்பாக அழைத்துச் சென்று குடியேற்றினார். ஆனால் தஸ்மேனியக குழு வாழ்க்கை சீரழிந்ததால், 1876 இல் கடைசி தஸ்மேனியா மனிதனும் மரணமடைந்து போனான்.

உலகின் வேறு சில பகுதிகளிலும் மனிதர்கள், மனிதர்களை அழிக்க முயன்றுள்ளார்கள். ஐரோப்பிய ஆதிக்கவாதிகளே இச் செயற்பாட்டில் முன்னணி வகித்தனர். அமெரிக்காவில் அடாத்தாகக் குடியேறிய ஐரோப்பியர், அந்தக் கண்டத்தின் மக்களான செவ்விந்தியர்களைப் பெருமளவில் அழித்தனர். நியூசிலாந்தில் வாழ்ந்து வந்த 42000 மாயோரிஸ் மக்களோடு நாடு பிடிக்கும் அவாவோடு யுத்தம் தொடுத்த ஐரோப்பியர் 30 ஆயிரம் மாயோரிஸ்களை அழித்தொழித்தனர்.

தென் அமெரிக்காவின் பம்பாஸ் வெளியிலும் (ஆசெந்தினா) பிறேசிலிலும் வாழ்ந்து வந்த நூற்றுக் கணக்கான மனிதக்குழுக்கள் வெள்ளையரால் கொன்றழிக்கப்பட்டன. அதற்குப்பயந்து அமேசன் காட்டின் ஒதுக்குகளுக்குள் குடியேறிய சுதேச மக்கள் நோய்களின் பிடியில் சிக்கி அழிய நேரிட்டது. உதாரணமாக 1884 இல் 3000 சிங்கு இன மக்கள் இருந்தனர். அவர்களில் இன்று ஆக 300 மக்களே உள்ளனர் என்பது கவலைக்குரியது.

ஐரோப்பாவிலும், வட ஆசியாவிலும் வாழ்ந்து வந்த சிறுபான்மை வெள்ளையர் இன்று கறுப்பின மக்களுக்குச் சொந்தமான அமெரிக்காக்கள், தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய பிரதேசங்களை அடாத்தாக ஆக்கிரமித்துள்ளனர். கறுப்பினப் பெரும்பான்மை மக்கள் தமது நிலவுரிமையை அவமே இழந்துள்ளனர். ○

---

"ஒரு மைல் தூரம் போ ......"
ஆமை: ஐயையோ, அவ்வளவு தூரமா?
முயல்: ப்பூ, இவ்வளவுதானா!
வேலை ஒன்றுதான். அதைச் செய்பவரின் திறமையைப் பொறுத்து ஒருவருக்குக் கஷ்டமாகவும், இன்னொருவருக்குச் சுலபமாகவும் தோன்றுகிறது.

---

# சிறுகதையின் கதை

● ச. பாலசுந்தரம், பீ. ஏ ●

சிறு கதை என்பது ஒரு தனிப்பட்ட இலக்கிய வகையாகும். அது உலகிலே தோன்றி 140 ஆண்டுகளுக்கு மேலாகின்றது.

அமெரிக்கரான உலகப் புகழ் பூத்த இலக்கிய ஆசிரியர் 'எட்கார் அலன் போ' என்பவரால் தொடக்கி வைக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட இலக்கிய வடிவமே சிறுகதை எனலாம்.

இந்திய மொழி ஆசிரியர்களில் முதன் முதல் சிறு கதை ஆக்க முயற்சியில் ஈடுபட்டவர் கவி ரவீந்திரநாத் தாகூரே. தாகூரை பின்பற்றி தமிழ் மொழியில் வ.வே.சு. ஐயரும், சுப்பிரமணிய பாரதியாரும் சிறுகதை இலக்கியத்திற்கு உருவம் அமைத்தனர். தாகூர் எழுதிய கதையொன்றை முன் மாதிரியாகக் கொண்டே வ.வே.சு. ஐயர் ''குளத்தங்கரை அரசமரம்'' என்னும் சிறு கதையை எழுதினார். அவர் எழுதிய கதைகள் ''மங்கையற்கரசியின் காதல் முதலிய கதைகள்'' என்னும் பெயரில் நூல் வடிவில் வந்துள்ளன. ''லைலா மஜ்னூன்'' ''எதிரொலிகள்'' ''அழேன் ழக்கே'' என்னும் கதைகளில் அவர் பிற நாட்டுக் கதாபாத்திரங்களை மிக அழகாகச் சித்தரித்துள்ளார்.

எந்த நாட்டு மக்களின் உணர்ச்சிகளையும், ஆசைகளையும் தமிழ் மொழியிலே திறம்படச் சித்தரிக்க முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக மேற்குறிப்பிட்ட கதைகள் விளங்குகின்றன. அவர் சிருட்டித்த கதாபாத்திரங்கள் உயிருடன் நடமாடுவன.

உண்மைக் காதல், தியாகம், வீரம் முதலிய மாண்புடை மக்கட் பண்புகள் அவர் கதைகளில் சிறந்து விளங்குகின்றன. எனினும் அவர் எழுதிய கதைகளிலே சிறு கதைக்குரிய பூரண வடிவம் அமையவில்லை என ஆய்வாளர் கருதுவர்.

சிறு கதை என்னும் இலக்கிய வடிவத்தை தமிழ் மொழியில் முதலில் அறிமுகப்படுத்தியவர் என்ற வகையிலும், சிறுகதை எழுதுவதில் ஓரளவு வெற்றி பெற்றுள்ளார் என்பதனாலும் வ. வே. சு. ஐயரை தமிழ்ச் சிறுகதையின் தந்தை என்று சொல்கிறார்கள்.

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் முன்னோடிகளான வ. வே. சு. ஐயர், சுப்பிரமணிய பாரதியார், மாதவையா போன்றோரின் கதைகள் படித்து இன்புறத் தக்கதாக இருந்த போதிலும் அவற்றைச் சிறந்த இலக்கியத் தரமுள்ள கதைகளாக இலக்கிய ஆய்வாளர் ஏற்பதில்லை. தமிழில் சிறந்த சிறுகதைகளை எழுதியவர்களில் சிலராக புதுமைப்பித்தன், கு. ப. ரா. மௌனி, தி. ஜானகிராமன், லா. ச. ராமாமிர்தம் முதலியவர்களைக் குறிப்பிடலாம். ○

# அறிவுக் களஞ்சியம் பொருளடக்கம்

(இதழ் 7 - 12)


| | | | |
|---|---|---|---|
| மின்மினிப் பூச்சிகள் | 7 - 2 | வம்ச வேர்களைத் தேடி | 8-16 |
| பிறநாட்டவர் இலங்கை பெயர் | 7 - 2 | சீனப்பெருஞ்சுவர் | 8 -17 |
| தென்னாசிய அமைப்பு | 7 - 3 | தேனீயின் செய்தித் தொடர்பு | 8 -18 |
| சேர் : சி . வி . இராமன் | 7 - 5 | நேரம் அறிதல் | 8 -19 |
| ஈழத்தின் முதல் தமிழ்ப் புலவர் | 7 - 7 | பெயரும் புனைபெயரும் | 8 -19 |
| மறக்க முடியாத நிகழ்வு (1) | 7 - 9 | ஈர மின்கலம் | 8 -20 |
| மோதிரக்கையால் ஒரு குட்டு | 7 -12 | சிறு சிறு செய்திகள் | 8 -22 |
| ராணித் தேனீ - ராஜ உணவு | 7 -13 | வங்காளதேசம் | 8 -24 |
| நீலக் குழந்தைகள் | 7 -14 | தங்கத்தின் மதிப்பு | 8 -25 |
| சர்க்கரைத் தேன் | 7 -14 | காப்பி குடிக்கும் பழக்கம் | 8 -25 |
| ஆழ்கடலின் அடியில் | 7 -15 | றக்ரர் | 8 -26 |
| சூரியன் | 7 -16 | காளான் வளர்ப்பு | 8 -27 |
| மின்கலம் | 7 -18 | நீடித்த ஆயுளுக்கேற்ற விதிகள் | 8 -28 |
| தமிழ்த் திகதிகள் | 7 -19 | சோ . சிவபாதசுந்தரம் | 8 -31 |
| எழுத்துக்கள் | 7 -20 | அமைதி வலயம் | 9 - 2 |
| திமிங்கிலங்கள் | 7 -21 | பஞ்சபூத சித்திகள் | 9 - 3 |
| குதிரை வீரர் சிலை | 7 -21 | போட்டோப் பிரதிப் பொறி | 9 - 4 |
| றொடியர்கள் | 7 -22 | கப்பல் பழமும் - | 9 - 5 |
| அல்பேட் ஸ்விட்செர் | 7 -24 | உங்கள் ஐயம் | 9 - 6 |
| பிரோ | 7 -25 | காக்கா பிடிக்கலாமா? | 9 - 7 |
| சந்திரன் | 7 -26 | தங்கத் தாத்தா | 9 - 8 |
| பொது அறிவு | 7 -27 | மின்னல் | 9 - 8 |
| உளவுக்கலை | 7 -30 | கால் பந்து வீரன் பீலே | 9 - 9 |
| நாட்காட்டி | 7 -31 | சிந்தி மொழி | 9 -10 |
| காட்டரசன் | 7 -31 | சுறா | 9 -11 |
| திசைகாட்டி | 8 - 2 | செவ்விந்தியர்கள் | 9 -12 |
| தளபதி கிட்டு | 8 - 3 | அன்னாசி | 9 -14 |
| பிலோ | 8 - 4 | திபெத் | 9 -15 |
| அக்பர் | 8 - 6 | லொச்நெஸ் ஏரி - விலங்கு | 9 -16 |
| எல்லாப் பாம்புக்கும் - | 8 - 7 | கயரோகம் | 9 -18 |
| தெரிந்து கொள்ளுங்கள் | 8 - 8 | கடல் சாமந்தி | 9 -20 |
| தேங்காய் | 8 - 9 | பாராட்டு | 9 - 21 |
| கண்டது கற்போம் | 8 - 9 | புளோட்டினஸ் | 9 - 23 |
| அன்ராற்றிக்கா | 8 -10 | எண் கோலங்கள் | 9 - 24 |
| அலெக்ஸ்ஸாண்றோவோல்டா | 8 -11 | சிறு சிறு செய்திகள் | 9 - 29 |
| 37 இன் சிறப்பு | 8 -12 | ஹெலி கொப்டர் | 9 - 27 |
| பூமியின் வெப்பநிலை - | 8 -13 | பூஷணி | 9 - 28 |
| தமிழ் அகராதியின் வரலாறு | 8 -14 | யாழ் கோட்டை முற்றுகை | 9 - 28 |
| சுலோன்டுப்ளோயன் | | ஆகஸ்டஸ் | 9 - 31 |
| -சுருக்கெழுத்து | 8 -15 | பெர்னாட்ஷா | 9 - 31 |
| யாழ்ப்பாண அகராதி | 8 -15 | உணவு | 10 - 2 |
| | | அன்னை பூபதி | 10 -3 |

ஈழநாட்டுத் தமிழ் விருந்து 10 - 5
அந்தாட்டிக் 10 - 6
கைபாப்மான் 10 - 7
அக்யுபஞ்சர் 10 - 7
யாழ் கடனீரேரித் திட்டம் 10 - 8
ஒலி தரும் விந்தை 10 - 10
உப்பு 10 - 12
தொலைநோக்கியை......... 10 - 13
சாள்ஸ் டாவின் 10 - 14
கடல் கொண்ட லெமூரியா 0 - 16
ஓசோன் படலத்துவாரம் 10 - 18
கம்பூச்சியாவில் ... கோவில் 10 - 15
கள்ளர் மறவர்...... 10 - 20
தமிழ்க் கவிதை மரபு 10 - 21
தேங்காய் 10 - 22
ஒரிஜன் 10 - 26
நீர் நாய் 10 - 27
சிறுசிறு செய்திகள் 10 - 29
ஏராதோஸ்தினிசின் உலகப்படம் 11 - 2
மிளகாய் 11 - 3
கடலட்டை 11 - 6
நமது உணவில் காய் கனிகள் 11 - 7
மந்திரச் சொல் 11 - 7
வலசை வரும் பறவைகள் 11 - 8
இடி அமீன் 11 - 9
சாணக் கோளம் 11 - 9
புழுக்கொடியல் மா 11 - 10
முன்னோடி முனிவர் 11 - 11
கேடு செய்யும் எண் - 13? 11 - 12
பொறுமையோ பொறுமை 11 - 13
வண்ணத்துப் பூச்சி முட்டை 11 - 14
தலைமயிர் நரை 11 - 14
தீ - தி 11 - 14
பறக்க முடியாத பறவைகள் 11 - 14
கின்னஸ் வெற்றிகள் 11 - 15
பேர் மூடா முக்கோணி 11 - 16
மலேரியா 11 - 18
விஞ்ஞான ஆரம்ப வரலாறு 11 - 19
வாழை 11 - 20
தூய ஒகஸ்டீன் 11 - 21
கிறேஸ் - லிங்கனை ...... 11 - 22
பச்சை ஆமைகள் 11 - 23
சிறுசிறு செய்திகள் 11 - 24
முதலை 11 - 26
எண்கோலம் 11 - 27
ஸ்பெயின் 11 - 28
சீட்டாட்டம் 11 - 28
விதைகள் பரவுதல் 12 - 2
அகஸ்டஸ் 12 - 3
மினி இயந்திர யுகம்... 12 - 4
நோர்வே 12 - 6
குடிசன மதிப்பின் வரலாறு 12 - 8
அசுவத்தாமன் 12 - 9
சாக்கடல் 12 - 10
X கதிர்கள் 12 - 12
புறவொட்டுண்ணிகள் 12 - 12
ஹிப்போ கிறிட்டிஸ் 12 - 14
செடியில் வளரும் ரோமம் 12 - 15
மாமதம் - கம்பளி யானை 12 - 16
கவியரங்கேறிய மன்னர் 12 - 18
அலுமினியம் 12 - 18
யாழ்ப்பாண நகரம் 12 - 19
கன்யங்கள் 12 - 20
'பிஞர்' துணி 12 - 20
திட்டச்சுத் தந்தை - கிறிஸ்தோபர் 12 - 22
கொலம்பஸ் - கடலோடி 12 - 23
பிரமதேவனுக்கு ஒரு நாள் 12 - 23
செஞ்சிலுவைச் சங்கம் 12 - 24
வினாக்களும் விடைகளும் 12 - 26
நெருப்புக் காய்ச்சல் 12 - 28
சிறு சிறு செய்திகள் 12 - 30



அ. க. 6 ஆவது இதழில் 1 - 6 இதழ்களுக்கான பொருளடக்கம் வெளிவந்துள்ளது. அதனுடன் இதையும் சேர்த்துக் கொள்க.

# பெண்கள் வண்டி!




1868 ஆம் ஆண்டு முதன் முதல் நீராவியால் இயங்கும் மோட்டார் சைக்கிள் ஒன்று ஆஸ்டின் (Austin) என்பவரால் அமைக்கப்பட்டது. 1900 -இல் தான் உண்மையில் பயன்படத்தக்க உள்ளெரி எஞ்சினுள்ள மோட்டார் சைக்கிள் உருவாகியது. மோட்டார் சைக்கிளை விட எளிய தோற்றமுடைய ஸ்கூட்டர், இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு டி' அசானியோ (D' Ascanio) என்ற இத்தாலிய எஞ்சினியரால் கண்டுபிடிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளை விட ஸ்கூட்டர் சிக்கனமானது. ஆரம்பத்தில் பெண்களுக்காகவே ஸ்கூட்டர் உற்பத்தி செய்யப்பட்டது. இத்தாலிய வெஸ்பா ஸ்கூட்டர் உலகப் புகழ் பெற்றது இன்று பஜாஜ், லம்ரெட்டா முதலான ஸ்கூட்டர்கள் பாவனையிலுள்ளன. பெண்கள் ஆடைகள் கசங்காமல், அடக்கமாக, அமர்ந்து ஓட்ட ஸ்கூட்டர் உகந்த அமைப்பினது. மண்ணெண்ணெயில் ஓடும் ஸ்கூட்டர்கள் யாழ்ப்பாணத்திலுள்ளன.

— ஹம்ஸ்



## வெட்டுக்கிளி

ஆபிரிக்காவின் பயிர்ச் செய்கைக்குப் பெரும் அழிவுக் காரணியாக விளங்குவது வெட்டுக் கிளிகளாகும் (Grass Hopper). கோடிக் கணக்கில் கரும்முகில்கள் விரைந்து வந்து இறங்குவது போல விளை நிலத்தில் இறங்கி, அழித்து விடும் பூச்சிகளாகும். கரப்பான் பூச்சி இனத்தைச் சேர்ந்தவை. கடித்துண்ணும் தாடை கொண்டவை. பெரும் கூட்டம் கூட்டமாகவே வலசை போகும் இயல்பின. வெட்டுக் கிளிகளில் குட்டையான உணர் கொம்புகள் உள்ளவை ஒருவகை. நீண்ட உணர் கொம்புகளுள்ளவை இன்னொரு வகையின. வெட்டுக் கிளிகள் எக் காரணத்தாலோ இலட்சக் கணக்காகப் பெருகி ஒன்றாகக் கூடி வலசை சென்று, பயிர் பச்சைகளையெல்லாம் தின்று நாட்டைப் பாழ் செய்து பஞ்சம் உண்டாக்குகின்றன.

— ஜெயா

# உலகில் மிகப் பெரிய பூ -

ஏ. இ. எஸ். பற்றிக்

சேர் ஸ்ராம்போர்ட் ரவல்ஸ் (Stamford Raffles) என்பவருக்கு இயற்கை வரலாற்றில் ஓர் ஆர்வம். இவர் சுமாத்திராவின் கவர்னர் ஆக இருந்த போது, தனது நண்பன் யோசவ் ஆர்னல்ட் (Joseph Arnold) என்பவருடன் சுமாத்திரா தீவிலுள்ள ஓர் அடர்ந்த காட்டுக்குப் பயணமானார்.

அங்கு அது வரை கண்டிராத ஒரு மிகப்பெரிய பூ ஒன்றைக் கண்டார்கள். ஆனல்ட் அப்பூவை தண்டிலிருந்து வெட்டி எடுத்து தனது கூடாரத்துக்கு எடுத்து வந்தார். அதன் நிறை 7 Kg ஆக இருந்தது. அதன் இதழ்களின் நீளம் 30 cm இது பற்றிய தகவல்களை இவர் பிரிட்டனிலுள்ள "றோயல் சொசயிற்றி" என்ற விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பினார்.

றொபேட் பிறவுன் என்ற தாவரவியலாளர் இவ்விருவரினதும் பெயர்களை இணைத்து ரவல்சியா ஆர்ணல்டி (Rafflesia Arnoldii) என்ற தாவரவியற் பெயரை அப்பூவுக்குச் சூட்டினார். பூவானது செங்கட்டி நிறமாகவும் வெள்ளைப் புள்ளிகள் காணப்படும். அழுகும் இறைச்சி மணம் கொண்டது. அதனால் பூச்சிகளும், இலையான்களும் இதனை மொய்த்துக் காணப்படும். இம்மரத்துக்கு வேர், தண்டு இலைகளே இல்லை. இது ஒட்டுண்ணியாகும்.

இது வரை இதனை விட பெரிய பூ காணப்படவில்லை. ஆனால் அப்பூவானது 150 வருட வயதுள்ள தாவரத்திலேயே பூக்குமாம். பூத்தவுடன் அத்தாவரம் இறந்து விடுகிறதாம். O

---



# மிதக்கும் உல்லாச நகரம்!

அதுதான் "குயின் எலிசபேத் 2" என அழைக்கப்படும் உல்லாசப் பயணிகள் கப்பலாகும். இது கடற்பயணக் கலங்களின் தோற்ற வரலாற்றில் வியத்தகு படைப்பாகும். இதில் செல்லும் பயணிகள் தாங்கள் தரையில் இருக்கும் போது பெறும் அனைத்து வசதி வாய்ப்புக்களையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம். இதில் பல அடுக்குகள் காணப்படுகின்றன. அவற்றின் மொத்தப் பரப்பளவு 3, 76, 254 ச. மீற்றர். இக்கப்பல் செய்மதியினாலும், கணணிகளினாலும் வழிநடத்தப்படுவதும், செய்திப் பரிவர்த்தனை செய்து கொள்வதும் குறிப்பிடத்தக்கது. 2025 பயணிகளும் 1000 சிப்பந்திகளும் இதில் செல்ல வசதியுண்டு. மூன்று உல்லாச விடுதிகளும், இரண்டு நூல் நிலையங்களும், இரண்டு மதுபானச்சாலைகளும், இரண்டு இரவு விடுதிகளும், ஒரு குழந்தைகளுக்கான பொழுது போக்கு அறையும், ஒரு விற்பனைக் கடைத்தொகுதியும், ஒரு திரையரங்கும், ஒரு கலந்துரையாடும் மண்டபமும் இந்த மிதக்கும் நகரத்துக்குள் அடங்கி இருக்கின்றன. O

ப. பலோமியர்

இரசாயன உரங்களுக்குத் தடையும் கட்டுப்பாடும் நிலவும் இப் போர்க்காலச் சூழலில் தேவைப்படுவது-

# கூட்டெரு

விமல்.

பயிர்களுக்கு மிகப் பொருத்தமான பசளை கூட்டெருவாகும். பயிர்களுக்குத் தேவையான மூன்று முக்கிய உணவுச்சத்துகளான நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாஸ் ஆகியவற்றைக் கூட்டெரு வழங்குகின்றதுடன், மண்ணின் பௌதிக இயல்பைத் திருத்தி, அதிக மண்ணீரத்தைப் பேணுவதற்கு உதவுகின்றது.

கூட்டெரு தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள் தோட்டக் கழிவுகள், குசினிக்கழிவுகள், மிருகக்கழிவுகள் ஆகியன வற்றைக் கூட்டெருவாக்கலாம். கூளங்கள், களைகள், பயிர் அடிக் கட்டைகள், காய்கறி பழங்களினது தோல்கள், மரச் சாம்பல் போன்றவையும் கூட்டெரு தயாரிக்க உதவும். கழிவுப்பொருட்களைக் கூட்டெரு ஆக்குவதற்கு மாடு, எருமை, ஆடு, கோழி ஆகியவற்றின் மலம் மிக உகந்தது. மாட்டின் சலம் கூட்டெரு தயாரிக்க மிகப் பெறுமதியானது

இரு முறைகளில் கழிவுப் பொருட்களைக் கூட்டெரு ஆக்கவியலும் ஒன்று குழிமுறை. மற்றையது குவியல் முறை. நீருச்குப் பற்றாக்குறை நிலவும் வறட்சிக் காலமும், குவியலைப் புரட்டுவதற்குத் தொழிலாளர் கிடையாத வேளையும் தவிர்ந்த ஏனைய காலங்களில் குழிமுறை விரும்பத்தக்கது.

குழி 3 அடி அகலம் 2அடி ஆழம் கொண்டதாக இருக்க வேண்டும். கழிவுப் பொருட்களைத் தினசரி சேர்த்து மெல்லிய படைகளாகக் குழியில் பரவுதல் வேண்டும். பரவும் பொழுது ஒரு படையில் சாணம், சலம், சாம்பல் ஆகியவற்றையும் மறுபடையில் ஏனைய பொருட்களுமாக மாறி மாறிப் பரவுதல் வேண்டும். இப்படையின் மேல் மாட்டுச்சலத்தை அல்லது சாணம் கரைத்த நீரை தாராளமாக ஊற்றுதல் வேண்டும். கழிவுப் பொருட்கள் சிதைவுற்றுப் பிரிக்கை அடைவதற்கு உதவும் விதமாக நுண்ணுயிர்களுக்கான காற்றோட்டத்தை ஏற்படுத்த வேண்டும. அதற்காகக் குழியிலுள்ள அல்லது குவியலிலுள்ள பொருட்களை 2 வாரங்களின் பின் புரட்டிவிடுதல் வேண்டும். இவ்வாறு மூன்று தடவைகள் புரட்டி விடுதல் வேண்டும். புரட்டும் போது நீர் தோயாத அளவு ஊற்றுதல் வேண்டும். மூன்று மாதங்களின் பின் கூட்டெருவை விரைவில் உபயோகப்படுத்தல் வேண்டும்.

சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட கூட்டெரு, மாட்டெருவில் காணப்படும் அதேயளவு செழுமை கொண்டதாக இருக்கும். மாட்டெருவைக் கூட்டெருவாக மாற்றினால் மாட்டெருவைப் போல ஐந்து மடங்கு கூட்டெருவைப் பெறலாம். கூட்டெரு பாதுகாப்பான பசளையாகும். ஒவ்வொரு வீட்டிலும் தினசரி சேரும் குப்பை கூளங்களையும், மிருகங்களின் கழிவுப் பொருட்களையும் சுகாதாரமான பயனுள்ள முறையில் அகற்றக் கூடிய ஓர் உபயோகமான வழி கூட்டெரு தயாரித்தலாகும். ○

# சிறுசிறு - செய்திகள்

O மக்களது அற்ப ஆசைகளுக்காக அழிக்கப்பட்டு வரும் விலங்குகள் பலவாகும். சிலவகை விலங்குகளின் மென் தோலுடன் கூடிய பட்டு மயிர்கள் ஆடம்பர உடுப்புகள் செய்வதற்கு உபயோகப்பட்டிருக்கின்றன. நரி, அணில், ஏர்மைன் சாபிள், பீவர் போன்ற விலங்குகள் மயிர்களுக்காகவும், தோல்களுக்காகவும் வேட்டையாடப்படுகின்றன. நாகரிகப் பெண்களின் ஆடம்பரத் தொப்பிகளுக்காக இவற்றில் சில இனங்கள் முற்றாக அழிந்து போய் விட்டன. — ஹம்

★

* நெசவு நாடா உபகரணத்தை 1733ல் ஜோன்கே என்பவர் கண்டு பிடித்தார். * நூல் நூற்கும் (ஜெனி) இயந்திரத்தை 1767ல் ஜேம்ஸ்காக்கிறிவ் என்பவர் கண்டு பிடித்தார். * நீர்ச்சட்டம் என்னும் உபகரணத்தை 1769ல் றிவட் ஆக்ரைட் என்பவர் கண்டறிந்தார். * இயந்திரத் தறியை 1785ல் எட்மன்ட் காட்றைட் என்பவர் கண்டறிந்தார். * நீராவியால் இயங்கும் இயந்திரத்தை 1735ல் நிவ்கோமன் என்பவர் கண்டுபிடித்தார்.

— யே. நிர்மலா
புனித அந்தோனியார் கல்லூரி

★

O பப்பாளிப் பழத்தில் வைட்டமின் ஏ. பி. அடங்கியுள்ளது. இதைச் சாப்பிடுவதால் ஜீரண சக்தி அதிகரிக்கிறது. பப்பாளி மலச்சிக்கலை நீக்குவதுடன் கல்லீரல் சம்பந்தப்பட்ட நோய்களையும் நிவர்த்தி செய்கிறது. கர்ப்பிணிகள் பப்பாளி சாப்பிட்டால் கர்ப்பம் கலைந்து விடும் என்பதெல்லாம் தவறான கருத்து என்று ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

★

O பிரேசில் என்பது ஒரு பழத்தின் பெயர். இந்த மரங்கள் ஏராளமாக இருந்ததால் இந்த நாடே பிரேசில் என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

★

O கழுதை, குதிரை, வரிக்குதிரை போன்ற பிராணிகள் தம்மை சுத்தம் செய்து கொள்ளப் பின்பற்றும் விசேடமான வினோதமான முறை என்ன தெரியுமா? புழுதியில் புரள்வது தான்.

செல்வ. தில்லைநாதன் கோபிநாத்
71/9, சீனியர் லேன் யாழ்.
யாழ். இந்துக் கல்லூரி

★

O உலகிலேயே அதி உயர் பதவி வகித்த தமிழ் மகன் முன்னாள் இந்திய ஜனாதிபதியாகிய திரு. ஆர். வெங்கடராமன்.

O 3 தடவைகளுக்கு மேல் கின்னஸ் புத்தகத்தில் பெயர் பதித்த இலங்கைத் தமிழன் ஆழிக்குமரன் ஆனந்தன்.

★

O இலங்கையில் கணக்காளர் நாயகம் (Auditor General) பதவி வகித்த ஒரே தமிழன் திரு. வி. கனகரட்ணம். (வட்டுக்கோட்டை)

— ஜெயவிஜயா திருச்சிற்றம்பலம்
மாதகல்.

★

O ஒவ்வொரு நாளும் புவியை நாற்பத்து நான்காயிரம் இடிமின்

னல்கள் தாக்கிய வண்ணமுள்ளன. ஒவ்வொரு மின்னலும் விநாடிக்கு இருபத்தெண்ணாயிரத்து ஐந்நூறு மைல் வேகத்தில் புவியை நோக்கிப் பாய்கிறது. ஒரு மின்னல் இருநூற்று ஐம்பது கோடி வோல்ட் மின்சாரமுடையது.

பா. கோபிநாத்
ஆண்டு 8E, யாழ். இந்துக் கல்லூரி

★

சில நாட்டின் தேசியப் பறவைகள்

* இலங்கை — காட்டுக்கோழி
* இந்தியா — மயில்
* அமெரிக்கா — கழுகு
* கனடா — வாத்து
* பிரிட்டன் — ராபின்
* அவுஸ்ரேலியா — நெருப்புக் கோழி
* தென் அமெரிக்கா — நீலக் கொக்கு
* ஜெர்மனி — வெள்ளைக் கொக்கு
* டென்மார்க் — வானம்பாடி
* ஹவாய் — குள்ளவாத்து

தெ. ஞானக்குமரன் ஆண்டு 10,
ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி
புத்தூர்.

★

O மர்மம் நிறைந்த பேர்முடா முக்கோணியை வாசித்த போது இதைப் போன்ற மர்மம் நிறைந்த ஆபிரிக்காவின் ''புண்டுஜி'' ஏரி நினைவில் வந்தது. இவ்வேரி நீர் புனிதத் தன்மையானது என அங்குள்ள பழங்குடி மக்கள் கருதுகின்றனர். இவ்வேரியை சூழ்ந்துள்ள தாவரங்களும் விந்தையாகவே காணப்படுகின்றன. இதை ஆராய்ச்சி செய்வதற்கு சென்ற பல விஞ்ஞானிகளும் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளனர். இற்றை வரை இவ்வேரியின் மர்மம் வெளிப்படவில்லை.

— ச. சிவசங்கரி
யாழ் இந்துக் கல்லூரி.

★

O தமிழ் உலகிலே ஏராளமான தமிழ் வீராங்கனைகள் இருந்திருக்கின்றார்கள். இவர்களுள்ளே, அடக்குமுறையாளருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய வீர வனிதைகளாக திகழ்ந்த இருவர்:-

ஒருவர் வன்னியிலுள்ள பனங்காமத்தை ஆட்சி செய்த பெண் ஆட்சியாளராகிய 'வன்னி நாச்சியார்' அவர்கள்.

மற்றவர் - மொறீஷியஸில் அடக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக போராடி தியாகியாகிய 'அஞ்சலி' எனும் தமிழ் பெண்.

— துரை. பிரஷாந்தன்
கொக்குவில்

★

கடலில் மிதக்கும் மீன் தொழிற்சாலை (கப்பல்) ஒன்று லண்டனில் கட்டப்பட்டுள்ளது. 200 அடி நீளத்தில் கட்டப்பட்டுள்ள இந்த மிதக்கும் மீன் தொழிற்சாலையில் 18 ஆயிரம் கன அடி அளவிற்கு மீன்களை ஏற்றிச் செல்ல முடியும். மணிக்கு 14 மைல் வேகத்தில் செல்லக் கூடியது. இந்தப் படகு கடலில் எந்தப் பகுதியில் மீன்கள் நடமாட்டம் அதிகம் என்பதைக் கண்டறியும் சிறப்பான கருவிகளும் இதில் உள்ளன.

— சி. நடனதாஸ்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# கென்றி கவென்டிஸ்

பத்மினி கோபால் பி. எஸ்ஸி.

கென்றி கவென்டிஸ் 1731 ல் சாள்ஸ் கவென்டிஸ் என்னும் ஆங்கிலேயப் பிரபுவின் மூத்த மகனாகப் பிரான்ஸ் நாட்டு நைஸ் என்னும் இடத்தில் பிறந்தார். சாள்ஸ் கவென்டிஸும் ஒரு விஞ்ஞானியே. உயர்வு இழிவு வெப்பமானியைக் கண்டு பிடித்தவர் இவரே.

கென்றி கவென்டிஸ் தனது 18 வது வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து நான்கு வருடங்கள் கற்றார். ஆனால் சமயம் கற்கவோ சமயப் பரீட்சைகள் எழுதவோ இவர் மறுத்ததனால் பட்டம் பெறவில்லை. அக்காலத்தில் கேம்பிரிட்ஜில் பட்டம் பெற கிறிஸ்தவம் கட்டாய பாடம்.

கவென்டிஸ் பெரும் பணக்காரப் பிரபுவாக இருந்தாலும் ஆடம்பரங்களை விரும்பாதவர். பிறர் கருமி என்று கருதுமளவுக்கு எளிமையாக வாழ்ந்தார். மாற்றிப்போட இரண்டு சோடி உடுப்புகளே அவரிடம் இருந்தன. அவர் மற்றவர்களுடன் பழகுவதே இல்லை. விஞ்ஞானிகள் மாத்திரம் தான் இவரது நண்பர்கள். அவர் அக்கறை எடுத்த ஒரே ஒரு விடையம் விஞ்ஞான ஆய்வுதான்.

அக்கால விஞ்ஞானிகள் நெருப்பை ஒரு சக்தி எனக் கருதாது பொருள் போன்றது எனக் கருதினார்கள். அது புளோஜிஸ்டன் எனப்பட்டது. இதனைப் பிரித்தெடுக்க நினைத்தார் கவென்டிஸ். தங்கள் நூல் நிலயத்தில் தந்தை சேகரித்து வைத்த கட்டுரைகளை ஆய்ந்தார். தியோ பறாஸ்டஸ் பராகிளீஸ்ஸஸ் என்பவரும் ஜான் வன் கொல்மொன்ற் என்பவரும் இரும்புடன் சல்பூரிக் அமிலம் சேர்க்கப்பட்ட போது வெளிவரும் வாயு சில கணங்களுக்கு எரியும் என்று குறிப்பிட்டு இருந்ததையும் அதை மேலும் ஆராயாமல் விட்டு விட்டதையும் கண்டார்.

தனது ஆய்வு கூடத்திலே உலோகங்களையும் அமிலங்களையும் தாக்கமுறச் செய்து பெறப்பட்டது ஒரே தன்மையான வாயுவெனக் கண்டார். அது எரியும் என்பதையும் வளியில் எரிந்து நீரைத் தரும் என்றும் கண்டார். மெல்லிய பலூன்களிலே அடைத்து வளியை விட மிகவும் லேசான அவ்வாயுவின் எடையையும் கண்டார். கவென்டிஸ் தான் புளோஜிஸ்டனைப் பிரித்துவிட்டதாக அரசகழகத்திற்கு அறிவித்தார்.

அவரது பிரெஞ்சு நண்பரான லவோசியரே அது புளோஜிஸ்டனாக இருக்க முடியாது; ஏன் எனில் புதிய வாயு வளியில் எரிந்து நீரைத்தருகிறது என்பதனைச் சுட்டிக்காட்டினார். நீரைத் தருவது என்னும் கருத்தமைய இவ்வாயுவுக்கு ஐதரசின் (hydrogen) எனப் பெயரிட்டார். (hydro ) நீர் என்றும் (gennan) உற்பத்தி என்றும் பொருள்படும். கவென்டிஸ் நைதரசனையும் கண்டு பிடித்தார்.

கென்றி கவென்டிஸ் இறந்த போது விட்டுச் சென்ற பல மில்லியன் பவுண்ட்ஸ்களைக் கொண்டு இவரது ஞாபகார்த்தமாக கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஓர் ஆய்வு கூடம் அமைத்தனர். பிற்காலத்தில் கவென்டிஸ் ஆய்வு கூட விஞ்ஞானிகள் பலர் நோபிள் பரிசு பெற்றனர். O



# கைச் சிறகி

ம. மதியரசி

வெளவால்கள் கைச்சிறகிகள் என்ற வரிசையைச் சேர்ந்தவை. பறக்கும் திறன் கொண்டிருப்பதால் இவை மற்றப் பாலூட்டிகளிலிருந்து வேறுபட்டவை. வெளவால்கள் காற்றில் தங்களுக்கு வேண்டிய இரையைப் பெறுகின்றன. தங்கள் செயல் வாழ்க்கையில் பெரும் பகுதியைக் காற்றிலேயே பறந்தவாறு கழிக்கின்றன. வெளவால்கள் தரையில் உட்காருவது இல்லை.

வெளவால்களின் கட்டமைப்பும் நடத்தையும் காற்றில் இயங்குவதற்கு ஏற்ற தகவமைப்பு கொண்டிருக்கின்றன. விரிவாகப் பரவியுள்ள பெருங்காதுத் துருஞ்சில் என்னும் வெளவால் இனத்தில் இந்தத் தகவமைப்பைக் காணலாம். பறப்புச் சவ்வுகளால் உருவான பெரிய தோல் சிறகுகளின் இயக்கத்தால் துருஞ்சிலின் சிறிய உடல் காற்றில் தாங்கிக் கொள்ளப்படுகிறது. நீண்ட கைவிரல்களின் இடையில் இழுத்துப் பரப்பப்பட்டுள்ள பறப்புச் சவ்வுகள் முன் கால்களிலிருந்து உடல் விலாக்களை ஒட்டினாற் போலச் சென்று பின் கால்களுக்கும் அங்கிருந்து வாலுக்கும் பரவியுள்ளன. துருஞ்சிலின் எலும்புகள் மெல்லியவை, இலேசானவை. மார்பெலும்பின் மேல் பறவைகளைப் போலவே குத்தெலும்பு வளர்ந்திருக்கிறது. சிறகுகளை இயக்கும் தசைகள் இதனுடன் இணைந்திருக்கின்றன.

பகல் வேளைகளில் துருஞ்சில்கள் மற்ற வெளவால்களைப் போலவே ஏதேனும் மூகட்டறை, குகை அல்லது மரப்பொந்து போன்ற ஒதுக்கிடத்தில் பின்கால் விரல்களால் பற்றிக் கொண்டு தலைகீழாகத் தொங்கும். மாலைக் கருக்கலில் அவை இரை தேடக் கிளம்பி, இரவு முழுவதும் வேட்டையாடிக் கொண்டிருக்கும். விட்டில்கள், வண்டுகள், கொசுக்கள், முதலிய பறக்கும் பூச்சிகளைப் பிடித்து, கூரிய சிறு பற்களால் நொறுக்கித் தின்னும்.

துருஞ்சில்களின் பார்வை மங்கலானது. முதன்மையாக ஒலியுணர்வின் உதவியினாலேயே அவை பூச்சிகளைப் பிடிக்கின்றன. துருஞ்சில் விரைவாகப் பறக்கும்; ஆயினும் காற்றில் உள்ள பொருள்கள் மேல் மோதிக் கொள்ளாது. ஒரு பரிசோதனையில் குருடாக்கப்பட்ட துருஞ்சில் ஒரு அறைக்குள் விடப்பட்டது. சிறுமணிகள் தொங்கிய ஏராளமான நூல்கள் அறையில் இழுத்துக் கட்டப்பட்டிருந்தன, துருஞ்சில் ஒரு நூலில் கூட இடித்துக் கொள்ளாமல் அனாயாசமாகப் பறந்தது.

சாதாரண ஒலிகள் தவிர, நமது காதுக்கு எட்டாத மிகையொலிகளைச் செய்யவும் கேட்கவும் துருஞ்சில்கள் வல்லவை என்பது தெரியவந்தது. பறப்புத் திசையை நோக்கி முன்னே செலுத்தப்பட்ட மிகையொலி அலைகள் ஏதேனும் தடையை எதிர்ப்பட்டால் அவை அதிலிருந்து எதிரொலித்து வெளவாலின் ஒலியுணர் உறுப்புகளால் வாங்கிக் கொள்ளப்படுகின்றன. இந்தகைய குறி கிடைத்ததும் வெளவால் பறப்புத் திசையை மாற்றிக் கொண்டு தடையிலிருந்து விலகிச் சென்று விடுகின்றது.

சில வெளவால்கள் குளிர்காலம் நெருங்கியதும் அதிகத் தெற்குப் பகுதியிலுள்ள நாடுகளுக்குப் பறந்து சென்றுவிடுகின்றன, கோடை காலத் தொடக்கத்தில் பெண் துருஞ்சில் ஒன்றிரண்டு குட்டிகளை ஈனுகிறது. தொடக்க காலத்தில் தாய்த் துருஞ்சில் குட்டிகளைத் தன்மேல் சுமக்கின்றது. குட்டிகள் தாயின் மார்பை மிக வலிவாகப் பற்றுக் கொள்ளும். ஆதலால் பறக்கும் போது கூடத் தாயின் மீதே இருக்கின்றன.

கேடு செய்யும் பூச்சிகளைப் பேரளவில் கொன்று ஒழிப்பதன் மூலம் வெளவால்கள் நன்மை செய்கின்றன. எனவே அவற்றைப் பேணிப் பாதுகாப்பது அவசியம். O

# கொடுமைக் காரக்கொலம்பஸ்

கிறிஸ்தோபர் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தார் என்றும், அவர் மிகுந்த துணிச்சலுள்ள வீரர் என்றும் பாடப் புத்தகங்களில் படித்திருக்கிறோம். புதிய நாடுகளைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற ஆவலால் கொலம்பஸ் தனது பயணத்தைத்தொடங்கவில்லை. ஆசியாவிலும் அதைச் சேர்ந்த இந்திய நாட்டிலும் நிறையத் தங்கம் கிடைக்குமென்று அறிந்து, தங்கம் சேர்ப்பதற்காகவே கொலம்பஸ் புறப்பட்டான்.

1492 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் கொலம்பஸ் பஹாமாத் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த 'குவானாஹான்' என்ற தீவை அடைந்தான். அந்த நாட்டில் வாழ்ந்த அரவாகு என்ற மக்கள் உடுப்பு ஏதும் அணியாமல் பிறந்த கோலத்தில் வாழ்ந்த போதிலும், பயிர்த் தொழில் செய்யவும், மீன் பிடிக்கவும், வேட்டையாடவும் கற்று, ஒரு சமூகமாகச் சேர்ந்து வாழப் பழகிய நாகரிகத்தோடு இருந்தார்கள்.

கொலம்பசையும் அவனுடன் வந்தவர்களையும் ஏதோ வேறு உலகத்திலிருந்து வந்தவர்களெனக் கருதிய அரவாகு மக்கள், அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். ஆனால் கொலம்பஸ் என்ன செய்தான்? அவர்களில் சிலரைப் பணயமாகப் பிடித்துத் தனது கப்பலுக்குக் கொண்டு போய் தங்கம் கிடைக்கும் இடங்களைக் கூறும்படி துன்புறுத்தினான். இளம் பெண்களைக் கொடூரமாகத் தனது உடற்பசிக்கு இரையாக்கினான்.

இவனைத் தொடர்ந்து அங்கு சென்றவர்களும் இதே பணியைத் தொடர்ந்து செய்தனர். மிகச் சொற்ப காலத்தில் அந்த அரவாகு இனமே இல்லை என்று சொல்லுமளவுக்கு அழிக்கப்பட்டனர்.

கத்தியால் வெட்டியும் மரங்களில் தூக்கியும் மட்டுமன்றி நெருப்பில் போட்டு எரித்தும் அந்த மக்கள் அநியாயமாக அழிக்கப்பட்டனர்!

— சு.ம.

# சில சின்னஞ் சிறு நாடுகள்

**ஐ ஐ ஐ எஸ். பி. கே. ஐ ஐ ஐ**

தமிழ் ஈழத்திலும் பார்க்க குறைவான நிலப்பரப்பையும் சனத்தொகையையும் கொண்ட சிறிய நாடுகள் பல உலகில் சுதந்திரமாகவும் தன்னாட்சியும் தன்னிறைவும் உடையனவாகவும் விளங்குகின்றன என்பதை அறியும் போது வியப்பும் மகிழ்ச்சியும் எழுகின்றன, அத்தகைய சில நாடுகளும் விபரங்களும் வருமாறு:

| நாடு | ஆட்சிமுறை | பரப்பு (ச. கி மீ ) | சனத் தொகை |
|---|---|---|---|
| அன்ரிகுவா பார்பூடா (ANTIGUA & BARBUDA) | பாராளுமன்றமன்ன ராட்சி | 442 | 80000 |
| பஃறெயின் BAHRAIN | மன்னராட்சி | 668 | 434000 |
| பார்படோஸ் (BARBADOS | பாராளுமன்ற மன்ன ராட்சி | 431 | 253000 |
| பெலோ (BELAU) | குடியரசு | 494 | 14000 |
| கேப்வேட் (CAPE VERDE) | ஒரேகட்சிக் குடியரசு | 4033 | 321000 |
| கிஸ்கே (CISKEI) | குடியரசு | 8300 | 728400 |
| கொமறோஸ் COMOROS) | கூட்டாட்சிக் குடியரசு | 1862 | 422000 |
| குக்தீவுகள் (COOK ISLANDS) | பாராளுமன்ற மன்ன ராட்சி | 234 | 17700 |
| டொமினிக்கா (DOMINICA) | பாராளுமன்றகுடியரசு | 751 | 74000 |
| ஜிப்றோல்டர் (GIBRALTER) | சுய ஆட்சி- பிரித்தா னிய கொலனி | 6.5 | 31200 |
| கிரனடா (GRANADA) | பாராளுமன்ற மன்ன ராட்சி | 344 | 87600 |
| கிரிபாடி (KIRIBATI) | பாராளுமன்றக் குடிய ரசு | 715 | 63000 |
| லீச்ரன்ரீன் (LIECHTENSTEIN) | பாராளுமன்ற மன்ன ராட்சி | 160 | 28500 |
| மாலைதீவு (MALDIVES) | குடியரசு | 298 | 189000 |

| | | | |
|---|---|---|---|
| மோல்ரா (MALTA) | பாராளு மன்றக் குடியரசு | 316 | 355000 |
| மார்ஷல் தீவுகள் (MARSHALL ISLAND) | பாராளு மன்றக் குடியரசு | 181 | 37000 |
| நாரூ (NAURU) | பாராளு மன்றக் குடியரசு | 21 | 8100 |
| சென். கிறிஸ்தபர் & நெவிஸ் (ST.CHRISTOPHER & NEVIS) | பாராளு மன்ற மன்னராட்சி | 619 | 123000 |
| சென்.வின்சென் & கிறனாடின்ஸ் (ST. VINCENT & GRANADINES) | பாராளுமன்ற மன்னராட்சி | 389 | 103000 |
| சன்மரீனோ (SAN MARINO) | பாராளு மன்ற குடியரசு | 61 | 23000 |
| செசீல்ஸ் (SEYCHELLES) | ஒரேகட்சிக் குடியரசு | 453 | 66000 |
| சிங்கப்பூர் (SINGAPORE) | பாராளுமன்ற குடியரசு | 620 | 25690000 |
| துவாலு (TUVALU) | பராளு மன்ற மன்னராட்சி | 26 | 8100 |

# இயற்கை தரும் இன்சுலின்



தமிழில் பாகற்காய் என அழைக்கப்படும் இதன் தாவரவியல் பெயர் Momordico Charontio ஆகும். சர்க்கரை வியாதி என அழைக்கப்படும் நீரிழிவு நோய்க்கு எமது பாட்டிமார் பண்டைக் காலம தொட்டு பயன்படுத்திய பெருமை பெற்றது இது. நீரிழிவு நோயக்கு நவீன மருத்துவம் இன்சுலின் ஊசியையும்; இன்சுலின் மாத்திரைகளையும் வழங்குகின்றது. இது அவசர சிகிச்சைக்கு பயன் படுத்தப் பட்டாலும் உடலோடு உருவாகி விட்ட நோயை உணவுக் கட்டுப் பாடு மூலமே முழுக் கட்டுப் பாட்டிற்கு கொண்டு வரலாம். இதற்கு இயற்கை மருந்தான பாகற்காய்ச்சாறு சிறந்த பயனளிக்கிறது.

பாகற்காயிலிருந்து இன்சுலினைப் போன்ற 'பாலிபெப்டைடு - பி' (Poly Peptide -B) எனும் இரசாயனப் பொருளை இந்திய பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழுவொன்று பிரித் தெடுத்துள்ளது. இம் மருந்து நீரிழிவிற்கு சிறந்த நிவாரணியாகும்.

மேலும் கசப்புச் சுவை (Bitter taste) உள்ள இது குடலிலுள்ள பூச்சிகளை அழிக்கவும் பயன் படுகிறது. சுதேச மருந்துவத்தில் இதன் இலை, காய், சாறு என்பன இன்றும் பயன்படுத்தப் படுகின்றன,

—ரேகா

## இலங்கையில்

# தமிழ் மொழியின் தொன்மை

**அநு. வை. நாகராஜன்**

தமிழ் மொழி இலங்கையில் நீண்ட காலமாக — ஆட்சிப் பீடம் வரை, ஒரு வழங்கு மொழியாகவும் நிருவாக மொழியாகவும் இருந்திருக்கிறது.

இன்று இலங்கையின் சிங்களப் பிரதேசம் எனக் கணிக்கப்படும் குருநாகல் மாவட்டம் — கி. பி. 17ம் 18ம் நூற்றாண்டு வரை, தமிழ்க் குடிகள் செறிந்து வாழ்ந்த பிரதேசமாக இருந்திருக்கிறது. அங்கு வாழ்ந்த தமிழர் தமது நிருவாக அலுவல்களை தமது தாய் மொழியிலேயே நடத்தியும் உள்ளனர். இதற்கான சான்றுகளும் ஆதாரங்களும் பலவுள. எடுத்துக் காட்டுக்கு ஒரு காணி உறுதியை இங்கு நோக்கலாம்:

> "எதிர்மொழி மொழிந்து, மறுமொழி பகர்ந்து 'விப்போம்' என்று விற்பதற் கிசைந்து 'கொள்வோம்' என்று கொள்வதற் கிசைந்து விலைபற விற்று பொருளறபற்றி எம்மி லிசைந்து எதிர்மொழி மொழிந்து தம்மில் இருவரும் தான் சம்மதித்து விற்பதற்கு இசைந்து கொள்வதற்கு வந்து......"

என்று இன்னும் பல வாசகங்கள் இங்கு தொடர்கின்றன. இதுவும், தூய நற்றமிழான — செந்தமிழ்ப் பாநடையில் - சந்த வோசை இழை யோட எழுதப்பட்டிருக்கின்றன.

இஃது, ஏலவிற்பனை ஒன்றின் மூலம் கைமாற்றப்பட்ட காணி உறுதியின் வாசகமாகும். இதில், விற்போர் கொள்வோர் ஆகிய இருவருக்கும் இடையில் நிகழும் சம்பவங்கள் குறிக்கப்படுகின்றன. மேலும் இதில் அக்காணியின் எல்லைகள் — விலைகள் — சொத்து சுகங்கள் - உரிமை கள் போன்ற பல விபரங்களும் காணக்கிடக்கின்றன,
அவை குறிக்கப்படுமிடத்து —

தேன்படு காடு, மீன்படு பள்ளம், குண்டு குழி உட்பட என்றும்; "காய் மரம், பூமரம் ,பலாமரம் உட்பட" என்றும்; "கல்லும் காவேரி யும், புல்லும், பூமி சந்திரன் உள்ளளவும் ஆண்டு அநுபவிக்க ....." என்றும் எழுதப் பட்டு இருப்பதோடு இதற்கு சாட்சியாக ஒப்பமிடுவோர்;...... எனக்கும் தெரியும்..... எனக்கும் தெரியும்......,என்று எழுதிக் கையொப் பம் இட்டு இருப்பதையுங் காணுகிறோம்.

# கலைக் களஞ்சியத்தின் கதை

● "புத்தொளி" ●

கலைக் களஞ்சியத்திற்கான "என்சைக்ளோபீடியா" எனும் ஆங்கில வார்த்தையானது கிரேக்க மொழியிலிருந்து தோன்றியதாகும். அதன் பொருள் அறிவின்" முழு வட்டம்" என்பதாகும். இக்களஞ்சியம் பொருள்கள், இடங்கள், அரிய கருத்துக்கள், முக்கிய பிரமுகர்கள் பற்றிய விபரங்கள் அளிக்கும் ஒரு தொகுப்பு நூலாகும். இதனை ஒரு கருத்துக் கருவூலம் என்றும் சொல்லலாம்.

ஒரு குறிப்பிட்ட தகவலைத் தெரிந்து கொள்ள ஒவ்வொரு முறையும் நூல் நிலையம் சென்று அதற்கான நூலைத் தேர்ந்தெடுத்து முழுவதுமாகப் படித்துத் தெரிந்து கொள்வதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்குத் துணைபுரியும் வகையில் கலைக் களஞ்சியங்கள் தோன்றலாயின. அகராதிக்கும், கலைக்களஞ்சியத்திற்கும் அடிப்படை வேற்றுமை உண்டு. அகராதி என்பது எழுத்துக்களின் அமைப்பு, வார்த்தைகளின் தோற்றம், உச்சரிப்புப் பொருள் போன்ற விளக்கங்களைத் தரக் கூடிய ஒரு ஒப்பு நோக்கு நூல் கலைக்களஞ்சியமோ ஒவ்வொரு பொருள், இடம், பெயர்கள் ஆகியவை குறித்து என்ன, எது, எப்படி, எங்கே, ஏன் போன்ற விளக்கங்களைத் தரக் கூடியது.

சேர் தாமஸ் எலியட் என்ற அறிஞர்தான் 1538ல் முதன் முதலில் "என்சைக்ளோபீடியா" என்ற வார்த்தையை உபயோகித்தார். பண்டைக் காலத்தில் கல்வி அறிவு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே இருந்தது. அப்போது தனி மனிதனால் கலைக் களஞ்சியம் எழுத முடிந்தது. கி.மு. 4ம் நூற்றாண்டில் கிரேக்க ஞானியான அரிஸ்டாட்டில் இயற்கை முதல் விஞ்ஞானம் வரை, தான் கண்டறிந்த உண்மைகளைத் தொடுத்து சுமார் 70 நூல்களாக எழுதினார். அவர் வழிவந்த ரோமானிய அறிஞரான பிளினி 'இயற்கையின் வரலாறு' என்னும் தலைப்பில் தனது கருத்துக்களைத் தொகுத்து 37 நூல்களை எழுதி வைத்தார். 'மார்க்கஸ் வாரோ' எனும் மற்றுமொரு ரோமானிய அறிஞர் பல துறைகளில் தான் கண்டவற்றைத் தொகுத்து 'டிஸிப்ளினே' என்ற தலைப்பில் 9பது தொகுதிகள் வெளியிட்டார். இன்று பிளினியின் நூலைத் தவிர மற்றவை நிலைத்திருப்பதாகத் தெரியவில்லை. பிளினியின் இயற்கையின் வரலாறு 43 பதிப்புகளைத் தாங்கி வெளிவந்தது. இந்நூலில் 450 அறிஞர் பெருமக்களின் 20,000த்து மேற்பட்ட கருத்துரைகள் இடம் பெற்றிருந்தன.

ஜான் ஹரிஸ் என்ற ஆங்கிலேயர் 1740ம் ஆண்டில் அனைத்து உலகக் கலை விஞ்ஞான ஆங்கில அகராதி என்ற பெயரில் ஒரு கலைக்களஞ்சியம் தொகுத்து வெளியிட்டார். அதில் தான் பொருள்களை அகர வரிசையில் அமைக்கும் முறையை முதலில் ஆரம்பித்து வைத்தார். 1772ம் ஆண்டில் ஏப்ராஹிம் சேம்பர்ஸ் என்பவர் எழுதிய சைக்லோபீடியா என்ற நூல் இரண்டு தொகுதிகளாக வெளிவந்தன. O

(மீதி டு அத்த இதழில்)

# குறுக்கெண் போட்டி - 1 முடிவு.

இப்போட்டியைத் தயாரித்தவர்,

திரு. மு. பொ. முத்துக்குமார், ஆசிரியர், யாழ் இந்துக் கல்லூரி

**சரியான விடை**

இடமிருந்து வலம்

1) — 225
4) — 15
6) — 72
8) — 20
10) — 90
12) — 600
16) — 45
19) — 15400

மேலிருந்து கீழ்

2) — 270
3) — 52
4) — 120
5) — 5000
10 — 961
12) — 650
16) — 44

இப்போட்டியில் பெருந் தொகையான வாசகர்கள் பங்குபற்றினார்கள். அவர்களில் 209 பேர் முற்றிலும் சரியான விடைகளை எழுதியிருந்தார்கள். சரியான விடை எழுதியவர்களிலிருந்து ஐந்து அதிர்ஷ்டசாலிகளைத் தெரிவு செய்தோம்.

1. சி. சுபாகரன், ஆண்டு 11, அ த. க பாடசாலை, மிருசுவில்
2. சி. விமலினி, கோண்டாவில் மேற்கு
3. பே. மணிமொழி, விக்டோரியாக் கல்லூரி, சுழிபுரம்
4. யோ. ராகுலன் யோகஸ்தான் வல்வெட்டி
5. தேவ குருபரன், புனித சம்பத்திரிசியார் கல்லூரி யாழ்

இவர்கள் ஐவருக்கும் பரிசுத் தொகை பகிரப்பட்டு ஆளுக்கு ரூபா 20/- வீதம் அளிக்கப்படுகிறது.

போட்டியில் பங்கு பற்றிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

— ஆசிரியர்

---

## படிப்பு ........

"என் வாழ்நாளில் எவ்வளவு புத்தகங்களைப் படிக்க முடியுமோ அவ்வளவு புத்தகங்களைப் படிக்க விரும்புகிறேன். படிப்பதற்கு இன்னும் அதிக நேரம் கிடைக்கவில்லையே என்றுதான் மனம் வலிக்கிறது. நாவல்கள், கவிதைகள் எல்லாம் எனக்குப் பிடிக்கும். சில நூல்களின் உள்ளடக்க அழகுக்காக அவற்றை ஐந்தாறு முறை கூடப் படித்திருக்கிறேன்." என்று சொல்கிறார் பிடல் காஸ்ட்ரோ, கியூபாவின் புரட்சித் தலைவர்.

சிறந்த தலைவர்கள் எல்லோருமே நிறையப் படிக்கிறவர்கள்தாம்.

தமிழீழத் தலைவர் பிரபாகரன் கூட நிறையப் படிக்கிறார் என்று சொல்கிறார்கள்.

உண்மைதான். நாங்கள் தொடர்ந்து படித்துக் கொண்டிராவிட்டால், உலகம் எங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னே போய்விடும்!

— சு. ம.

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் நடத்திய

# கண் (கொள்ளாக்) காட்சி

யாழ் மாவட்டத்தில் ஊருக்கு ஊர் சனசமூக நிலையங்கள் இருப்பதை அறிவேன். ஆனால் அவை என்ன செய்து கொண்டிருக்கின்றன என்ற விபரம் எனக்குத் தெரியாது. ஆனால், கடந்த யூன் மாதம் 4, 5, 6 ஆம் நாள்களில் அவர்கள் ஒரு மகத்தான திருவிழாச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் மட்டுமல்ல; இந்த நாடே தெரிந்து கொண்டது!

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக் களத்தின் ஆதரவுடன், இந்த ச. ச. நி. சம்மேளனம், யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஒரு 'கண்காட்சி' நடத்திற்று.

அது வெறும் கண்களுக்கு மட்டும் காட்சியாக அமையாமல், கருத்துக்கும் விருந்தாக அமைந்தது!

○ ஈழத்தில் இதுவரை வெளிவந்த நூல்கள் சஞ்சிகைகள் எல்லாவற்றையுமே பெரும்பாலும் அங்கே பார்க்க முடிந்தது.

○ தமிழீழம் பெருமைப்படத்தக்க ஓவியங்கள், சிற்பங்கள், புகைப் படங்கள் அத்தனையையும் அங்கே கண்டேன்.

இதைவிட —

ஒரு சிறந்த அம்சமாக, சித்த மருத்துவக் கண்காட்சியும் அங்கே அமைந்திருந்தது.

முதல் நாள் காலையில், நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட பிரமுகர்

---

அறிவுக் களஞ்சியம் சிறப்புப் பொது அறிவுப் போட்டி

## போட்டி நறுக்கு

பெயர் ........................................

முகவரி ........................................

பாடசாலை (மாணவராயின்) ........................

........................ ........................

கையொப்பம் திகதி

களை 'பான்ட்' வாத்திய இசையுடன் கெம்பீரமாக, மண்டபத்துக்கு அழைத்து வந்த காட்சியுடனேயே விழா களைகட்டி விட்டது! (இது ஏன் இந்த 'பான்ட்' வாத்தியம்? மங்களகரமாக எமது மேளதாளங்களோடு தொடங்கியிருந்தால் உள்ளூராட்சி ஆணையாளரின் 'நாஷன'லோடு அது ஒத்துப் போயிருக்குமே' என்ற நினைப்பைத் தடுக்க முடியாமலிருந்தது.)

கண்காட்சி மூன்று நாட்கள் நடந்தன. பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து பார்த்துப் பயன் பெற்றார்கள்.

காட்சி ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, நாள்தோறும் உரை அரங்குகளும் இன்னொரு பக்கம் நடந்து கொண்டிருந்தன.

இலக்கியம், கலை, சித்த மருந்துகள் குறித்து அவ்வத் துறைகளில் தகுதி வாய்ந்த பல அறிஞர்கள் சொற் பெருக்காற்றினார்கள்.

சம்மேளனத் தலைவர் திரு வை. செகராசசிங்கம் ஒரு இளைஞனுக்குள்ள துடிப்போடு 'ஓடி ஆடி' இந்த விழாவுக்குச் சிறப்புச் செய்திருக்கிறார்.

○ ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை விற்பனை செய்வதற்கு ஒரு நல்ல ஒழுங்கு செய்யப் போவதாகவும்,

○ யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக ஒரு கலைக் கூடம் அமைக்கப் போவதாகவும்,

விழாவை 'ஆக்கிப் படைத்த' உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவாகலாலா விழாவின் இறுதியில் அறிவித்து, பலத்த கை தட்டல்களைப் பெற்றுக் கொண்டார்.

திரு. டிவாகலாலா உத்தியோகத் துறையில் ஒரு நல்ல நிலையை எய்தி விட்டவர்; ஆனால் அதோடு திருப்திப் படாமல் மக்களின் மனங்களில் - முக்கியமாக எழுத்தாளர்கள் கலைஞர்களின் மனங்களில் ஒரு நல்ல இடத்தைப் பிடித்து விட வேண்டுமென்று ஆசைப்படுகிறார் போலத் தெரிகிறது.

நல்ல ஆசைதான்! - அவருக்கு எனது வாழ்த்துக்கள்!

— வரதர்.

---

இந்த இதழின் சில பிரதிகளில் — 6 ஆம் பக்கத்திலுள்ள சிறப்புப் பொது அறிவுப் போட்டி பற்றிய விபரத்தில் '30 வினாக்கள்' என்று அச்சாகியுள்ளது. '25 வினாக்கள்' என்பதே சரியானதாகும்.

— ஆசிரியர்.

---

# வணக்கம்

உங்கள் அபிமான அறிவுக் களஞ்சியத்துக்கு இன்று இரண்டாவது ஆண்டு தொடங்கியிருக்கிறது.

பல வாசகர்கள் ஆர்வத்தோடு 'பிறந்த நாள் வாழ்த்துகள்' தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

எமது துணை ஆசிரியராக இருந்து வந்த திரு கல்வயல் வே.குமாரசாமி, சில சொந்த வசதியீனங்கள் காரணமாக அந்தப் பதவியிலிருந்து விலகிக் கொள்கிறார். ஆயினும் அவருடைய ஆதரவு உத்தியோகப்பற்றற்ற முறையில் அறிவுக் களஞ்சியத்துக்கு என்றும் இருக்குமென்று தெரிவித்திருக்கிறார்.

புதிய துணை ஆசிரியராக எழுத்தாளர் - பிரமுகர் வட்டத்தில் நன்கு அறியப்பட்ட 'புத்தொளி' வந்திருக்கிறார். மிகுந்த உற்சாகமும், உழைப்பும் மிக்க 'புத்தொளி' அறிவுக் களஞ்சியத்துக்கு உறுதுணையாக இருப்பார்.

சென்ற இதழில் அறிவித்தபடி சிறப்புப் பொது அறிவுப் போட்டி பற்றிய விபரங்களும் வினாக்களும் இந்த இதழில் வெளிவந்துள்ளன. வாசகர்களுக்கு ஒரு நல்ல விருந்து கிடைத்திருக்கிறது!

O 'சந்தா' செலுத்தி, அஞ்சல் வழியில் அறிவுக் களஞ்சியத்தைப் பெறுவது குறித்து ஏற்கெனவே பலர் கேட்டிருந்தார்கள். பரீட்சார்த்தமாக அந்த முறையை நடைமுறைக்குக் கொண்டு வந்து பார்க்கலாமென்று தீர்மானித்திருக்கிறேன்.

**அஞ்சல் வழியில் அறிவுக்களஞ்சியம்**

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிகளில் உள்ளவர்கள் மட்டும் இப்போதைக்கு சந்தா செலுத்தலாம். அதுவும் முதலில் ஐந்து இதழ்களுக்கு மட்டும் பணம் அனுப்புங்கள். நாலாவது மாதக் கடைசியில் அவர்களுக்கு அறிவிக்கும் போது அடுத்த ஐந்து இதழ்களுக்குரிய பணத்தை அனுப்பலாம்.

5 இதழ்களுக்கான கட்டணம் ரூபா 60.00

அஞ்சல் மூலம் பிரதிகள் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படும். விரும்புவோர் ரூபா 60/- ஐ ரொக்கமாகவோ, காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ, முகாமையாளர், அறிவுக் களஞ்சியம், 226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

— வரதர்

அறிவுக் களஞ்சியம் - 13, யாழ்ப்பாணம், காங்கேசன் துறைச் சாலை, 226 ஆம் இலக்கத்திலுள்ள ஆனந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டவர்: தி. ச. வரதராசன். யூலை '93.

# வாசகர் கருத்து

O ...... தாங்கள் அனுப்பிய அன்பளிப்பு ரூபா 30/- க்குரிய காசோலை பெற்றேன். இந்த 51 வருட காலத்தில் எத்தனையோ கட்டுரைகள், சஞ்சிகைகளிலும், மலர்களிலும், துண்டுப் பிரசுரங்களிலும் எழுதியுள்ளேன். ஆனால், கட்டுரைக்கு சன்மானம் பெற்றது இதுவே முதல் தடவையாகும். இப்பணம் எனக்குரியதல்ல, என்னை வழிநடத்தும் விநாயகப் பெருமானுக்குரியது. அதை நாங்கள் ஆரம்பிக்கும் ''கரவை தச்சன் தோப்பு விநாயகர் ஆலய வித்தியா விருத்தி'' சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளேன்.

— சி. பொன்னம்பலம், கரவெட்டி.

O பரந்துபட்ட பொது அறிவை வளர்க்கும் நோக்கத்துடன் தங்களாலும், தங்களைச் சார்ந்த அறிஞர் குழாத்தினராலும் வெளியிடப்பட்டு வரும் ''அறிவுக் களஞ்சியம்'' என்னும் நூலுக்கு, வரும் 12 ஆவது இதழோடு ஓராண்டு நிறைவு ஏற்படுகிறது. ஓராண்டு அகவையைப் பூர்த்தி செய்யும் அ. க. வை, வாசகப் பெருமக்களாகிய நாமும் வாழ்த்துகிறோம்; பாராட்டுகிறோம்.

— கே. இராஜகோபால், தொல்புரம்.

O சிறு சிறு செய்திகள் சிறிது சிறிதாக சிறுவர்களது சிறு அறிவை வளர்க்கின்றன.

— ப. தியாகினி
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

O

அறிவு வளர
ஆக்கங்கள் தந்த மலரே
இளையவர் இதழாக
ஈழத்திலே மலர்ந்தனையோ
உவகை ஊட்டி
ஊக்கமும் அளித்தாய்
எத்தனை எத்தனை கட்டுரைகள்
ஏற்று மலரும் போது
ஐயம் பலவும் தீர்த்தாய்
ஒரு ஆண்டும் நிறைவுறும் வேளை
ஓராயிரம் ஆண்டு மலர்ந்தது போல்
ஓங்கியே நின்றது உன் புகழே.

— R. ஜெயந்தி

O அறிவுக் களஞ்சியத்துக்கு சந்தா செலுத்தினால் தபால் மூலம் அனுப்புவீர்களா?

— க. சு. மணியம், பருத்தித்துறை.

★

15 வயதுக்கு
உட்பட்ட
சிறார்
களுக்காக

வரும்

★

'வரதர்
கதை
மலர்'ரில்

முதலாவது

நூல்

★





★

* ஒரு காடு
* ஒரு சிறுவன்
* ஒரு யானை
விறுவிறுப்பான
நிகழ்ச்சிகளுடன்
சுவையான
கதை

★

ரூபா 12/-

★

உங்கள்
விற்பனை
யாளரிடம்
செல்லுங்கள்!

★

பிரபல எழுத்தாளர் அநு. வை. நாகராஜன் அவர்கள்

எழுதிய

# அவன் பெரியவன்

பொது அறிவு நூல்கள்

✢ பொது அறிவு ✢ ஆய்ந்தறிதல் ✢ பொது உளச்சார்பு
✢ கிரகித்தல் ✢ நுண்ணறிவு

ஆக்கியோன், க. குணராசா: எம். ஏ

~~~ எல்லாப் புத்தக சாலைகளிலும் கிடைக்கும். ~~~
~~~